பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

THE EELANADU

மலர்: 19 பங்குனி 10 ரபி ஆகி: 2 இதழ்: 41
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-3-77

அண்ணா சோயாப் பவுடர்
இது ஓர் சக்திமிக்க பானம் ஆரோக்கிய வாழ்விற்கு புரத சத்து நிறைந்த அண்ணா சோயாபானத்தைபருகுங்கள் சகலவித அளவுகளிலும் எல்லா இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். இன்றே அண்ணா சோயாப் பவுடரை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துங்கள்.
விநியோகஸ்தர்கள்:
அண்ணா தொழிற்சாலை
இணுவில்.
தொலைபேசி: 7412

## இந்தியத் தேர்தல் முடிவு
(வெளிவந்த முடிவுகள் - 527)
கட்சிகளின் நிலை

| | |
|---|---|
| ஜனதா கட்சி— | 269 |
| ஜனநாயக காங்கிரஸ்— | 27 |
| அகாலிதளம்— | 08 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூ.— | 21 |
| காங்கிரஸ்— | 152 |
| இந்திய கம்யூனிஸ்ட்— | 07 |
| அ. அ. தி. மு. க— | 19 |
| உதிரிக்கட்சிகள் (சுயேச்சை உட்பட)— | 38 |

ஜனதா: அறுதிப் பெரும்பான்மை!

# மொரார்ஜி புதிய பிரதமர்; சவான் எதிர்க்கட்சித் தலைவர்?

## புதிய மந்திரிசபை வரும்வரை இந்திரா பிரதமராக இருப்பார்

### மந்திரிசபை நேற்று ராஜினாமா செய்தது

தேர்தலில் காங்கிரஸ்கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கடந்த பத்து ஆண்டுகளாகப் பிரதம மந்திரியாகப் பதவி வகித்துவந்த திருமதி இந்திராகாந்தி நேற்றுச்செவ்வாய்க்கிழமை காலை தமது மந்திரிசபையின் ராஜினாமாவை பதில் ஜனாதிபதி திரு. பி. டி. ஜட்டியிடம் சமர்ப்பித்தார்.

ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட பதில் ஜனாதிபதி புதிய மந்திரிசபை பதவியேற்கும்வரை பதவியிலிருக்கும்படி கேட்டுக்கொண்டார். பிரதமரும் இதற்குச் சம்மதித்தார்.

### புதிய பிரதமர் இன்று தெரிவு

தேர்தலில் வெற்றியீட்டிய ஜனதாக்கட்சி (நான்கு கட்சிகள்) இன்று புதுடில்லியில் கூடுகிறது. ஜனதாக்கட்சியின் தலைவர் இன்று தெரிவு செய்யப்படுவார். தலைவராகத்தெரிவு செசய்யப்படுபவர் புதிய பிரதமராக நாளை பதவியேற்பார். திரு. மொரார்ஜிதேசாயே தலைவராகத் தெரிவுசெய்யப்படுவாரென்றும் அவரே புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்படுவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று ஜனதாகட்சித் தலைவர்களையும் ஜனநாயகத்துக்கான காங்கிரஸ்தலைவர் திரு. ஜெகஜீவன்ராமையும் சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவார்.

**காங்கிரசின் புதிய தலைவர்**

திருமதி இந்திராகாந்தி தேர்தலில் தோல்வியடைந்ததால் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவின் தலைவர் தெரிவு இன்று நடைபெறவிருக்கிறது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் திரு. வை. பி.சவான்புதிய தலைவராகத் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் ஆட்சி மன்றக்குழுவின் தலைவரே எதிர்க்கட்சித்தலைவராக இருப்பார்.

**ஜனதாவுக்கு இன்னும் 5 வேண்டும்**

ஆட்சியை தனியே அமைப்ப
தற்கு ஜனதா கட்சிக்கு இன்னும் 3 ஆசனங்களே வேண்டும். இதுவரை 533 தொகுதி
களின் முடிவுகள் வெளிவந்துள்ளன. இன்னும் 7 முடிவுகள் வெளிவரவேண்டும்.

## தேர்தலில்மோசடி:பஞ்சாபில் மீண்டும் வாக்குப்பதிவு

புதுடில்லி, மார்ச் 11 இரவு 11 மணிவரை வெளியான முடிவுகளின்படி 7 தொகுதிகளிலிருந்து முடிவுகள் வெளிவரவில்லை.

மேற்கு வங்காளத்தில் 3 தொகுதியிலும், ஆசாமில் 2 தொகுதியிலும், ஜம்பு காஷ்மீரில் இரண்டிலும், பீகார், பஞ்சாப், ஹிமாலயப் பிரதேஷ் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொன்றும் வெளிவரவிருந்தன.

பஞ்சாப்பில் ஒரு தொகுதியில் தேர்தல் வாக்குகள் எண்ணும்போது ஏற்பட்ட மோசடி சம்பந்தமாக தேர்தல் அதிகாரி தேர்தல் ஆணைக்குழுவுக்கு செய்துகொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து இங்கு மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தேர்தல் திகதி விபரம் இன்னும் அறிவிக்கப் படவில்லை.

ஜம்புகாஷ்மீரில் பனிப் பட

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசுடன் ஒத்துழைத்து நாட்டை முன்னேற்றுவேன்

### இந்திரா அறிக்கை

புதுடில்லி: மார்ச் 22 வரவிருக்கும் புதிய அரசுக்கு தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டுள்ள பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, புதிய அரசுக்கு தமது கட்சியும் தாமும் ஆதரவு கொடுத்து நாட்டின் வளர்ச்சியில் சேர்ந்துழைக்கப்போவதாக கூறியிருக்கிறார்.

இன்று காலை 10 மணியளவில் மந்திரிசபைக் கூட்டத்தை நடத்திவிட்டு நேரே, ராஷ்டிரபதி பவனுக்குச் சென்ற திருமதி இந்திரா தமது ராஜினாமாவையும், தமது அரசாங்கத்தின் ராஜினாமாவையும் பதில் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தபின்னர், அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார்.

தேர்தலில் மக்கள் அளித்துள்ள சரியான தீர்ப்பை பணிவுடனும் பரந்த மனப்பான்மையுடனும் ஏற்றுக் கொள்வதாக பிரதமர் இந்திரா இந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

சகல பிரிவு மக்களின் நல்வாழ்வுக்காக புதிய அரசுக்கு தமதும் தமது கட்சியினதும்ஆதரவு இருக்கும்என்று கூறியுள்ள அவர், வெற்றியும்தோல்வியும் ஜனநாயகத்தின் ஓர் அம்சம், தோல்வி என்பதற்காக நாம் கலவரமடைய மாட்டோம். பதிலாக நாட்டின் வளர்ச்சியில் எமது அக்கறை இருக்கும் என்று கூறியுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## காந்திசிலைக்கு அணிவகுத்து சென்ற ஜனதா எம்.பி.க்கள்

### காந்திய கொள்கையை கடைப்பிடிக்க,உறுதி

புதுடில்லிமார்ச் 22 மாகாத்மா காந்தியின் கொள்கையைக் கடைப்பிடித்து காந்திய விசுவாசத்துடன் நாட்டைக் கொண்டு நடத்துவதென ஜனதா கூட்டணி திடசங்கற்பம் பூண்டுள்ளது.

நான்குகுழுக்களைக் கொண்ட ஜனதா கூட்டணி எம் பிக்கள் இன்று காலை காந்தி சமாதிக்கு சென்று மரியாதை செலுத்தினர். சகல உறுப்பினர்களும் காந்தி சிலையை நோக்கி அணிவகுத்துச் சென்ற காட்சி எல்லோரது கவனத்தையும் கவர்ந்தது.

**கட்சித்தடை நீக்கம் கைதிகள் விடுதலை**

அவசரகால சட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனந்தமார்க் உட்பட 24 கட்சிகளுக்கு இருந்துவந்த தடை நீக்கப்பட்டுவிட்டது. அத்துடன் சிறைவைக்கப்பட்டிருந்த சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

[7-ம் பக்ககம் பார்க்)

புதிய வகுப்புகள்
ஆரம்பம்: 1 - 4 - 77
G. C. E. O/L 1977 Dec.
(காலை முழு நேர வகுப்புகள்)
G. C. E. A/L 1978 Apr.
(காலை, மாலை நேர வகுப்புகள்)
H. N. C. E. 1978 Apr. (மாலை நேர வகுப்புகள்)
தொடர்பு கொள்க: அதிபர்- (தி. லோகநாதன் B. A.
கல்வி போதனா நிலையம்.
34, பலாலி வீதி, 5753 யாழ்ப்பாணம்.

## ஜி. ஜி., திருச்செல்வத்திற்கு தி.மு.க. அனுதாப தீர்மானம்

### ஜனதா வெற்றிக்கு மகிழ்ச்சி; தொடர்ந்து சேர்ந்து இயங்கவும் முடிவு

சென்னை, மார்ச். 22 நாட்டில் ஜனதா கட்சிக்கு கிடைத்துள்ள அமோக வெற்றிக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் பொருட்டு திரு. மு கருணாநிதி தலைமையில் சென்னையில் இன்று கூடிய தி.மு.க. செயற் குழு இலங்கையில் மறைந்த சட்டமேதைகளான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. மு. திருச்செல்வம் ஆகியோரின்

[8-ம் பக்கம் பார்க்க[

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட மன்றில்

இணுவில் நாகன் சங்கரன்

வழக்காளி

எதிராக

இல. M B/10653

இணுவில் முருகன் பரமசாமி மரணம்
பரமன் முருகன் மரணித்தவரின் சட்டபூர்வமாக
நியமிக்கப்பட்ட பிரதிநிதி

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M B / 10653-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 6-ம்திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 1627/77. இதில் ரூபா 1000/-க்கும் 1-3-69 தொடக்கம் 11-10-69 வரைக்கும் 100க்கு 10 வீதவட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 249/11 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 168/12. நடைபெறவேண்டிய செலவு ரூபா 43/27. மேலதிக சமயாசமயச் செலவு 37/62) தீர்வைத்தொகையில் தி. கு. 17-6-72ல் ரூபா 500/-ம் செலவில் ரூபா 251/-ம் தி. கு. 28-9-72ல் ரூபா 751/-ம் கொடுபட்ட வகையில் கழிக்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோவில்பற்று இணுவில் இறைமுத்தியா "Muthiya" பர. நில 9ஒன்பதும் இதில் கிழக்குப் பக்கமாகவிற்ற வகையில் ½ பரப்பு பிறநீங்கல் இதன் மிகுதியில் வடக்குப் பக்கமாக விற்ற வகையில் பா நில 4¼ பிறநீங்கல். இவ் மிகுதி ஆதனம் பர நில. 4¼ இல கிழக்கு பக்கமாக சீதனம் கொடுத்த வகையில் பர. நி. 2 பிறநீங்கல் மிகுதி பா நில 2¼ இரண்டேகாலுக்குரிய கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் பனைகளும் வடலிகளும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு வேலன் தம்பிப்பிள்ளை பெண் பூரணத்திநனம், வடக்கு கந்தன் அரியகுட்டி பெண் பொன்னிமிறைகனம், மேற்கு நாகன் சங்கரனின் ஆதனம், தெற்கு தம்பிப்பிள்ளை பெண் பூரணத்திறைதனம் இதடங்களும்.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,
28-2-77.

5756

இன்று
திறப்பு விழா
நண்பகல்
12 மணிக்கு
சுண்ணகம்
புது மார்க்கட் கட்டிடம்
10-ம் இலக்கத்தில்
நாஹம்ஸ் .
பாட்டா ஷூ கொம்பனியின்
அனுமதி பெற்ற
வியாபார நிலையத்தை
பாட்டா ஷூ கொம்பனி முகாமை அதிபர்
திரு. அலெக்ஸ் ஃபெர்னண்டஸ் அவர்கள்
திறந்து வைப்பார்கள்.
பாட்டா

சங்கானை ப. நோ. சங்கம்

# பொன்னுத்துரை அறிக்கையை உடன் அமுல்நடத்த முடிவு

சங்கானை, செவ்வாய்

சங்கானை ப.நோ கூ. சங்கத்தின் புதிய நெறியாளர் குழு இன்று திரு. எம். கே. சுப்பிரமணியம் தலைமையில் கூடியது. முக்கிய விடயமான தொழிலாளர் வேலைநிறுத்தம் பற்றி ஆராயப்பட்டது.

தொழிலாளர் பிரச்னைக்கு சுமுகமான தீர்வை விரைவில் ஏற்படுத்துவதற்கு சபையின் ஏகோபித்த ஒத்துழைப்பு இருந்ததைத் தொடர்ந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளான வடபிராந்திய இலங்கை கூட்டுறவாளர் சம்மேளன பொருளாளர் எஸ். வேலாயுதம்பிள்ளை, வடபிராந்திய உபதலைவரும் சங்கானைக் கிளை செயலாளருமான த. இராசதுரை, சங்கானைக் கிளை உபதலைவர் ரி. இராசரத்தினம் எஸ். கே. திருச்சிற்றம்பலம் ஆகியோர் வரவழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

திரு. பொன்னுத்துரையின் பணிப்புரைகள் உடன் அமுல் நடாத்துவதுடன் மற்றும் பிரச்னைகளும் தீர்ப்பதற்கு பணிப்பாளர் சபை வாக்குறுதி அளித்ததைத் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் ஏற்று சகல ஊழியர்களும் உடனடியாக வேலைக்குத் திரும்புவதாக ஒப்புக்கொண்டனர்.

கூட்டுறவு சம்மேளன சங்கானைக் கிளைச் செயலாளர் இராசதுரை இதுபற்றி சகல ஊழியர்களையும் வேலைக்குச் சமுகமளிக்கும்படி கோரியுள்ளார்.

சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கூ. ஆ. ஆணையாளர்களான திரு. எஸ். ஜெயகாந்தன், திரு. எஸ். நாகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு)

## பயிற்சிபெற்ற கி. சேவையாளர்

உடுப்பிட்டி, செவ்.

வடபகுதியில் கிராமசேவையாளர்களுக்கான பயிற்சி பெற்றுவந்த பத்து கிராம சேவையாளர்களும யாழ். மாவட்டத்தில் ஏழு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். விபரம் வருமாறு:-

திருவாளர்கள் செ. அ. ஞானச்சந்திரன் துன்னாலை தெற்கு, வி. வைத்தீஸ்வர மூர்த்தி அனலைதீவு, எஸ். ஜெயபாலசிங்கம் சுருவில், ஆர். நித்தியானந்தன் வீமன்காமம், எஸ். தட்சணாமூர்த்தி மயிலிட்டி, என். பரமசிவம் மட்டுவில் வடக்கு, ரி. நந்தகுமார் கற்கோவளம், ஆர். சண்முகநாதன் கோயில்வயல், எஸ். துரைசிங்கம் கிளாலி, எம். தயானந்தன் மட்டுவில் மத்தி. (உ)

## கேள்வி விளம்பரம்

### அல்லைப்பிட்டிக் கிராமசபை

1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 6-ந் திகதி புதன்கிழமை 10-00 மணி வரை பொது நூல்நிலையக் கட்டிடம், 2. பஸ் தரிப்பு நிலையக் கட்டிடம், 3. மெலி ஓசியார் காட்டுக்கிணறு ஆகிய வேலைகளுக்கான சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 29-3-1977-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை சபைஅலுவலகத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 10/-ம் கேள்விப்பணமாக ரூபா 50/-ம் கட்டியதன் பின்பு பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரத்தின் பிரதி ஊர்காவற்றுறைப்பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளருக்கும், யாழ்ப்பாணஉதவிஉள்ளூராட்சிஆணையாளருக்கும் 6-4-1977-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்கள் கந்தோர் நேரத்தில் கிராமச்சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

செ. தவவிநாயகம் ச.நி.
தலைவர்,
அல்லைப்பிட்டிக்
கிராமாட்சி மன்றம்.

கிராமச்சபை,
அல்லைப்பிட்டி. 5762

## தவக்கால நற்சிந்தனை

"இருளில் நடக்கின்றஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது" (ஏசாய,9.2)

உலக இரட்சகர் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னால் தீர்க்கதரிசி ஏசாய அருளியவேதவாக்காகும். உலகம் இருளில் ஆழ்த்தப்பட்டிருந்தது பாவம் எனும் பேரிருளிலே மூழ்கியிருந்தது. அந்த இருளை கிழித்து எங்கிருந்தோ ஓர் ஒளிவந்தது. அஞ்ஞான மார்க்கத்தில் அழுந்தி மெஞ்ஞான போதத்தைவிட்டு வெகுதூரம் வழிநடந்து மரணக்குகையில்லை வெகுதூரம் அல்லலுற்றுச் சாகும்தறுவாயிலிருந்த பாவக்குழியின் மீது அப்பேரொளி பிரகாசிக்கிறதே அது சாதாரண ஒளியா? ஞான ஒளி அல்லவா!

கிறிஸ்து பிறப்பதற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னே ஏசாய சொன்ன தீர்க்கதரிசனத்தின் பொன்மொழிகள், கிறிஸ்துவின் மூலாகவே சொல்லப்படுகிறது.

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்"

(யோதான் 8-12)

காட்டுப் பாதையை கடக்க எண்ணுகிறவன் தீப்பந்தத்தின் உதவியை நாடுகிறான். இல்லையென்றால் அவன் காட்டைக் கடந்து நாட்டை அடையமுடியாது. சுரங்கத்தில் நுழைந்து தங்கத்தை வெட்டிஎடுப்பவன் விளக்கின் ஒளியைத்தேடுகிறான். இல்லையெனில் அவன் பாதாளச்சுரங்கத்தை துருவிப் பார்த்து தங்கத்தைத்தேடி எடுத்துவர இயலாது. ஆனால் நம் இதய இருளைப்போக்கிக் கொள்ள என்ன வழியைக் கண்டுபிடித்திருக்கிறோம்? எண்ணிப்பார்த்தோமா நாம்?

—ஞானஒளி

## நெடுந்தீவுக்கு தனிப. நோ. கூ. ச வேண்டுமாம்.

நெடுந்தீவு, செவ்வாய்

தீவுப்பகுதி பல. நோ. கூ. சங்கம் முன்னர் போல் ஊர்காவற்துறை, வேலணை, புங்குடுதீவு என மூன்றாகப்பிரிக்கப்படவுள்ளது. தீவுப்பகுதிப் பல நோ. கூ. சங்கத்தைமுன்போல் பிரிக்கவேண்டுமென தீவுப்பகுப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினமும் வேறு பலரும் கோரிவந்தது தெரிந்ததே. இதே சமயம் நெடுந்தீவு மக்கள் தமக்குத் தனியான பல. நோ. கூ. சங்கம் அவசியமென வற்புறுத்தி வருகின்றனர் எனபது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### தேவை

கன்வஸர் (Canvasser) விளையாட்டுத்துறையில் ஈடுபாடும் அனுபவமும் உள்ள ஒருவர் எமது விளையாட்டுத்துறை மாத சஞ்சிகை "நோர்தேர்ண் ஸ்போட்ஸ்" இல் வயது 19-25 கடமையாற்றத் தேவை. தயவு செய்து 27-3-1977 மு. ப. 8-00- நண்பகல் 12-00 வரை நேரில் தொடர்பு கொள்க. இ. இராஜேந்திரராஜா, 338, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

5754

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபலஸ்தாபனத்துக்கு பைப்புகள் இணைக்கவும், பழுது பார்க்கவும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இத்துறையில் பயிற்றப்பட்டு சித்தியடைந்த, நல்ல அனுபவம் வாய்ந்த ஒருவர் உடன் தேவை. எவ்வளவு காலம் இத்துறையில் அனுபவம் என்பதையும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5763, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5763

### கல்வி

1977 ஆவணியில் பரீட்சை எடுக்கவுள்ள H. N. C. E. வகுப்பு மாணவர் கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல் பாடங்களும், O/L வகுப்பார் எண் கணிதமும் சிறந்த ஆசிரியர்களிடம் கற்க ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்பு கொள்க. சி. தயானந்தசிவம், சிவாகல்வி நிலையம், உபதபாற் கந்தோர் இல்லம், நீராவியடி.

5759

## கேள்வி அழைத்தல்

வேலணை கிராமசபைக்குட்பட்ட காணிகள் கட்டிடங்கள் அரசாங்க அலுவலகங்கள் மதிப்பீடு செய்வதற்கு கேள்விகள் 30-03-1977 காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மதிப்பாளர்கள் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். 30-03-1977 காலை 10-30 மணிக்குப்பின் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டா.

குறைந்த கேள்விக்காரருக்கே மதிப்பீடு செய்யும் வேலை கொடுக்கப்படலாம். கேள்வி ஏற்றுக்கொண்டதும் கிராம சபையின் அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் அக்கிராசனரின் ஒப்பந்தம் எழுதவேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் பதிவுத்தபால்மூலம் கிராமசபை, வேலணை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மதிப்பாளரைத் தெரிவு செய்யும் பொறுப்பு அக்கிராசனருக்கே உரியது. ஏதாவது மேலும் விபரம் அறிய விரும்பின் இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

நன்றியுள்ள
க. சதாசிவம்,
அக்கிராசனர்,
கிராமசபை,
வேலணை.

கிராமசபைக் காரியாலயம்,
வேலணை,
21-03-1977. 5761

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# மார்க். கம்யூனிஸ்ட் தலைவர் கோபாலன் காலமானர்

திருவனந்தபுரம், மார்ச் 22

இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவரும் பழம்பெரும் அரசியல் வாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான திரு. ஏ. கே. கோபாலன் கடந்த நள்ளிரவு காலமானர்.

நீண்டநாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்த இவர் தமது 73-வது வயதில் காலமானர். முன்னள் லோகசபை உறுப்பினரான இவர் திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் கடந்த ஓராண்டுகாலமாக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

### முன்னள் ஆசிரியர்

1904-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கன்னூரில் பிறந்த திரு. கோபாலன் முதலில் ஆசிரியராகப் பதவி வகித்த போது 1927-ம்ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்த தன் மூலம் அரசியலில் நுழைந்தார்.

### பட்டினிநடை யாத்திரை

1937-ம் ஆண்டு கன்னூரிலிருந்து சென்னைவரைபட்டினி நடை யாத்திரையை இவர் முன்னின்று நடத்தியது குறிப்பிடத்தக்கது.

### விடுதலைப் போராட்ட வீரர்

இந்திய விடுதலைப்போரில் தீவிரமாக ஈடுபட்ட இவர் பல தடவை சிறை சென்றிருக்கிறார்.

இதன்காரணமாக பல தடவைகள் மறைவிடங்களில் வாழ்ந்தும் இருக்கிறர்.

### கம்யூனிஸ்ட்கட்சியில் 1940-ல் இணைந்தார்

இந்திய காங்கிரஸிலிருந்து விலகி 1940-ம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட்கட்சியில்இணைந்து கொண்ட இவர் 1964-ம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியில்பிளவுஏற்பட்டபோது இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்துகொண்டார். (இ)

## பத்திரிகைத் தணிக்கை ரத்து

புதுடில்லி, மார்ச் 22

இந்தியாவில் பத்திரிகைத்தணிக்கை நீக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

1975-ம் ஆண்டு ஜூன் மாதம் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து அமுலிலிருந்த பத்திரிகைத் தணிக்கை கடந்த ஜனவரியிலிருந்து சிறிது தளர்த்தப்பட்டிருந்தது.

அவசரகாலச் சட்டம் நேற்றுமுதல் நீக்கப்பட்டதை அடுத்து பத்திரிகைத் தணிக்கையும் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்தது. (இ)

## அமெரிக்க ராணுவ அதிகாரி ஜப்பானில் கைது!

### ஜப்பானிய மாணவியை கற்பழிக்க முயன்றாராம்!

டோக்கியோ, மார்ச் 22

ஜப்பானின் ஸகாநிகாரா பட்டினத்தைச் சேர்ந்த பள்ளி மாணவியாகிய எம். கமிதோனேவை பலாத்காரமாகக் கற்பழிக்க முயன்றரென்ற குற்றச்சாட்டின்பேரில் அமெரிக்க இராணுவ அதிகாரி ஆர். புறூக்ஸ் ஜப்பானியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பள்ளி மாணவி கமிதோனேவினைத் தனது ஜீப்பினுள் இழுத்துப் போட்டுக்கொண்ட பின்னர், இராணுவ அதிகாரி அவள்மீது பலாத்காரம் புரிய முயன்றராம். அவர் இதற்கு இடம்கொடுக்க மறுக்கவே, புறூக்ஸ் அவரை நன்றாக நையப்புடைத்து வீதியில் தூக்கியெறிந்தாராம்.

ஜப்பானிலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்களைச் சேர்ந்த அமெரிக்க இராணுவ வீரர்களின் இத்தகைய குற்றச் செயல்கள் ஜப்பானியப் பொதுமக்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ஜப்பானில் அமெரிக்க இராணுவ வீரர்கள் 14,000 குற்றச் செயல்களைப் புரிந்துள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. (இ)

கேரள சட்டசபையில்

## ஆளும்காங்கிரஸ்கூட்டணிக்கு பெரும்பான்மைபலம்

புதுடில்லி, மார்ச். 22

கேரள சட்டசபைத் தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கூட்டணியினர் 111 தொகுதிகளைப் பெற்று மிகக் கூடுதலான பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளனர்,

இம் மாநிலம் 140 தொகுதிகளைக் கொண்டது. (இ)

### பருவா வெற்றி

அஸாமில் உள்ள தொகுதி ஒன்றில் போட்டியிட்ட காங்கிரஸ் தலைவர் திரு. பருவா தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனதா கட்சி வேட்பாளரை 54 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றர்.

### டில்லியில் 7 இடங்களிலும் ஜனதா வெற்றி

யூனியன் பிரதேசமான டில்லியிலுள்ள 7 தொகுதிகளையும் ஜனதா கட்சியே கைப்பற்றியுள்ளது.

### குஜராத்தில் ஜனதா-15 காங் - 10

குஜராத் மாநிலத்தில் உள்ள 26 தொகுதிகளில் ஜனதாகட்சி 15 இடங்களையும் இந்திரா காங்கிரஸ் 10 இடங்களையும் மீதியுள்ள ஒரு தொகுதியை ஜனதா ஆதரவு சுயேச்சை உறுப்பினரும் கைப்பற்றியுள்ளனர். (இ)

# வரலாறு படைத்த நாராயணுக்கு வரவேற்பு

## பாலம்விமானநிலையத்தில்மகிழ்ச்சிஆரவாரம்

புதுடில்லி, மார்ச் 22

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதல்தடவையாக பிரதமர் ஒருவரைத் தோற்கடித்துப் புதியசகாப்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ள திரு. ராஜ்நாராயண் புதுடில்லி வந்தபோது பாலம் விமானநிலையத்தில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள்கூடி நின்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் இவரை வரவேற்றனர்.

ரேபரேலி தொகுதியில் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை 55,202 வாக்குகளால் வெற்றியீட்டிய ஜனதாக்கட்சி அபேட்சகரான திரு. ராஜ்நாராயண் புதுடில்லியில் நடைபெறும் ஜனதாகட்சியின் அவசர கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக புதுடில்லி வந்துள்ளார்.

### தேர்தல் முடிவுகள் ஆரம்ப படிகளே

இந்தியாவில் ஜனநாயகஆட்சியை ஏற்படுத்துவதற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மக்கள் எமக்கு அளித்துள்ளஉரிமையின் முதற்படியே நடந்து முடிந்த தேர்தல் ஆகும் என்று திரு. ராஜ் நாராயண் பாலம் விமானநிலையத்தில் தெரிவித்தார். (இ)

# இந்தியத் தேர்தல் சுவையான செய்திகள்

நமது விசேஷ நிருபர்

### சிறுவன் ஆசை

மதுரையிலுள்ள ஒரு வாக்களிப்பு நிலையத்தின் அருகே நின்றுகொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் வாக்காளர்களின் ஏகோபித்த கவனத்தைப் பெற்றனர். அழகர் எனும் சிறுவன் சட்டை எதுவும் அணியாமல் தனது தோள்களிலும், நெஞ்சிலும் இந்திராவின் படங்களை அலகு குத்துவதுபோலக் குத்தியிருந்தான். மற்றுமொரு சிறுவன் எம். ஜி. ஆரின் படங்களைக் குத்தியிருந்தான்.

### துண்டு! துண்டு!!

கிழக்கு மந்தைவெளியில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்கு வந்திருந்த ஒரு பெண் தனது வாக்குச்சீட்டைச் சுக்குநூருகக் கிழித்து வீசினர். விபரம் அறியாமல் முழித்த தேர்தல் அதிகாரி, ''இது என்ன காரியம்?'' என்று கேட்டதும், ''எப்படி வாக்களிப்பதென்று எனக்குத் தெரியவில்லையே? அதுதான் இப்படிச் செய்தேன்'' என்றர். இதன் பின்னர் வேறொரு வாக்குச் சீட்டுக் கொடுக்கப்பட்டு, முறையும் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

### மூதாட்டிகள் மயம்!

திருவல்லிக்கேணிப் பகுதியைச் சேர்ந்த 95 வயது மூதாட்டி பார்வதியம்மாள் தன்னந்தனியே வாக்களிக்க வந்திருந்தார்.

மயிலாப்பூரில் ஒரு மூதாட்டி வாக்குச்சீட்டை எப்படிப் பெட்டியில் போடுவதென்று தெரியாது சில செக்கண்டுகள் முழித்துக்கொண்டிருந்தார். சென்றவரைக் காணவில்லையே என்று தேர்தல் அதிகாரி உள்ளே சென்று பார்த்ததும், அந்த மூதாட்டி வாக்குச்சீட்டை மடித்து, மேசைத் துவாரம் வழியாகச் சொருகிக்கொண்டிருந்தார்!

வட சென்னை மணலியில் 102 வயதுள்ள கண் தெரியாத முதியவர் தனது 82 வயது மனைவியுடன் ஆர்வமுடன் வாக்களிக்க வந்திருந்தார்.

கோபாலபுரத்தைச் சேர்ந்த 74 வயதுள்ள அமிர்தாம்பாள் எனும் மூதாட்டி வாக்களிக்க வந்திருந்தார். வாக்குச்சீட்டை எடுத்துத் தனக்கு விருப்பமான சின்னத்தை வாக்குச் சீட்டிலிருந்து கிழித்து ஒரு பெட்டியில் போட்டுவிட்டார். இதன் பின்னர் விபரம் அறிந்த தேர்தல் அதிகாரி மற்றுமொரு வாக்குச்சீட்டைக் கொடுத்து முறைப்படி வாக்களிக்கச்செய்தார்.

மத்தியப் பிரதேசத்திலுள்ள பூதப்பாரா வாக்களிப்பு நிலையத்திற்கு 80 வயதுள்ள மூதாட்டி ஒருவர் வந்திருந்தார். அவர் முழிசிக்கொண்டிருப்பதைக் கவனித்த தேர்தல் அதிகாரி, 'என்ன விஷயம்' என்று கேட்டார். அந்த மூதாட்டியோ ''யாருக்கப்பா வாக்களிக்க?'' என்றர். இதன் பின்னர் தேர்தல் அதிகாரி, வாக்களிக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்தார். பின்னர் அந்த மூதாட்டி ஒழுங்காக வாக்களித்தார்.

கர்னடகம், காமராஜ்நகர் தொகுதியொன்றில் 80 வயதுள்ள மூதாட்டியின் செயல் மிகவும் விபரீதமாக அமைந்திருந்தது. வாக்களித்த பின்னர், அவர் தனது வாக்குச்சீட்டை நேராக அதிகாரியிடம் கொடுத்து ''இதனை பிரதமருக்கு அனுப்பிவையுங்கள்'' என்று கூறிவிட்டார்!

இதே வாக்களிப்பு நிலையத்துக்கு பத்துக்கும் அதிகமான 100 வயது மூதாட்டிகள் வந்திருந்தனர். நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் வாக்களிக்க தாங்கள் ஒரு தடவையும் தவறியதில்லை என்று இவர்கள் கூறினர்கள்!

### புறக்கணிப்பு!

பீகார் மாநிலத்திலுள்ள ஷாபூர் தொகுதியில் உள்ள வாக்குச் சாவடியைச் சேர்ந்த 1000 வாக்காளர்கள் இன்று இன்று வாக்களிக்க மறுத்து விட்டனர். கடந்த முப்பது ஆண்டுகளாக அரசு தங்களுக்கு ஒன்றும் செய்யவில்லையென்றும், தங்களின் கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டதென்றும் குற்றம் சுமத்தினர்கள்.

இதேமாதிரி, கோலப்பூர் எனும் பகுதியிலுள்ள கிட்வாடு கிராமத்தில் ஒருவர்கூட வாக்களிக்கவில்லை. தங்களின் கோரிக்கைகளை அரசு ஏற்கவில்லை என்று காரணம் கூறினர்கள்.

### மணக்கோலம்

பூனு தொகுதியில் இன்று ஒரு ருசிகர சம்பவம் நடந்தது. திருமணக்கோலத்துடன் மணமகள் இல்லம் நோக்கி பாண்ட் வாத்தியங்களுடன் ஊர்வலமாகச் சென்றுகொண்டிருந்த மணமகன் பாபன் பிரபாகர், மணமகள் வீட்டுக்குச் செல்லாமல் நேராக வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, வாக்களித்துவிட்டு பின்னர் மணமகள் வீடு சென்றர்!

(5ம் பக்கம் பார்க்க)

தொழிற்சாலையில் இருந்து புதிதாக முழுமையான உடைபடாது இயற்கை எண்ணெயில் தகரங்களில் அடைக்கப்பட்ட 'சாடின்ஸ்' மீன் 16 அவுன்ஸ்




ஒருதென்ஆப்பிரிக்கத் தயாரிப்பு
எல்லா மளிகைக்கடைகளிலும் கிடைக்கும்.
வியாபாரவிசாரணைகளுக்கு;
செ.ன்.அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்லிமிட்.
516, ஸ்கின்னஸ்ரோட் தெற்கு
கொழும்பு-10
போன்: 24261-5

### மணிவாக்கு

அரசிடம் சார்ந்து வாழ்கின்றவர், அதனை மிக நீங்காமலும், மிக அணுகாமலும் நெருப்பில் குளிர் காய்கின்றவர் போல இருத்தல்வேண்டும்.

—திருவள்ளுவர்.

ஈழநாடு
THE EELANADU

## இந்திய மக்கள் தீர்ப்பு

இந்தியாவில் ஜனநாயகம் அழிந்துவிடவில்லை.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயகநாடு இந்தியா என்றபெயரை அது நிலைநிறுத்திக்கொண்டது.

இந்தியாவில் ஜனநாயகம் அழிந்துவிட்டது என்றகுரல் எழுந்தபோது ''அழியவில்லை'' என்று பதில் கொடுத்த திருமதி இந்திரா தனது வாக்கைப் பொய்ப்பிக்கவில்லை.

தேர்தல் நடத்தினுர். மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொண்டுபதவியிலிருந்து விலகுகிறுர்.

1947-ம் ஆண்டுமுதல் கடந்த முப்பதாண்டு காலமாக ஆட்சிபீடத்திலிருந்த காங்கிரஸ் இந்தப் பொதுத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

கடந்த பத்து ஆண்டுகள் ஆட்சிப் பீடத்திலிருந்த திருமதி இந்திராகாந்தி தனது சொந்தத்தொகுதியிலேயே தோல்வியடைந்திருக்கிறுர்.

ஒரேகட்சி தொடர்ந்து முப்பதாண்டுகள் ஆட்சியிலிருந்தபடியால் ஆட்சிபீடத்தில் ஒருமாற்றத்தை மக்கள் விரும்பினுர்கள் என்று முழுமையாகச் சொல்லிவிடமுடியாது.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் ஆட்சியை நிராகரித்து ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜனதா கட்சியும் அதன் தோழமைக் கட்சிகள் சிலவும் முற்றிலும் புதிய தலைமையைக் கொண்டவைகளல்ல.

இந்தக்கட்சிகளின் தலைவர்களும் அவைகளின் சார்பில் காங்கிரஸ் ஆட்சியைப் பதவியிலிருந்து இறக்க வேண்டுமென்று முழுமூச்சுடன் செயல்பட்டவர்களும் இந்தக் கட்சிகளின் வேட்பாளர்களாக நின்று இன்று ஆட்சிமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் பலரும் முன்னர் காங்கிரசிலிருந்தவர்கள்.

காங்கிரஸ் ஆட்சியில் பொறுப்பான பதவிகளிலிருந்தவர்கள்.

நேருமந்திரிசபையிலிருந்து இந்திரா மந்திரிசபைவரை பதவிவகித்தவர்களும் இனி ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளில் உள்ளனர்.

இந்திய சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டுச்சிறைசென்றவர்கள்பலர் இப்போது ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே முற்றிலும் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமென்பது தான் மக்களின் விருப்பமாக இருந்ததென்றும் சொல்லமுடியாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதும் சிறைப்படுத்தப்பட்ட தலைவர்கள் பலரும்தான் இன்று ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்று கஷ்டப்பட்டவர்களை மீண்டும் சிறைக்குள் அடைத்ததை மக்கள் விரும்பியிருக்கமுடியாது.

சிறைக்குள் அடைத்து வைத்து, பத்திரிகைத் தணிக்கையையும் கடுமையாக அமுல் நடத்திக்கொண்டு, வானெலியையும் மற்றும் சகல சாதனங்களையும் அந்தத் தலைவர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் மக்கள் மத்தியில் இழிவுபடுத்தக்கூடிய முறையில் பயன்படுத்திப் பிரசாரம் செய்யப்பட்டதையும் மறுத்து உரைப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படாததையும் மக்கள் விரும்பியிருப்பார்களா?

ஜோர்ஜ் பெர்னண்டஸ் சிறைக்குள் இருந்தபடியே 3 லட்சம் வாக்குகளால் வெற்றிபெற்றது இதற்குச் சான்று.

ஆட்சிமன்றத்தைத் திடீரெனக் கலைத்து, மிகக் குறுகிய காலத்திற்குள் தேர்தலுக்குத் தேதி நிர்ணயித்துச் சிறையிலிருந்தவர்கள் வெளியே வந்து பிரசாரம் செய்வதற்கும் தம்மீது சுமத்தப்பட்ட பழிகளுக்குப் பதில் சொல்லவும் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

இந்திராவின் இருபது அம்சத் திட்டத்தையும், சஞ்சய் காந்தியின் ஐந்து அம்சத் திட்டத்தையும் செயல்படுத்துவதற்கும், அவற்றுக்கான பிரசாரத்திற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் ஒரு காரணமாகும்.

சென்ற பொதுத் தேர்தலின் பின் ராஜ் நாராயண் அலகாபாத் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த தேர்தல் ஆட்சேபமனு மீது வழங்கப்பட்ட தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, ராஜ்நாராயணையே சிறையில் வைத்தது மக்களுக்குப் பிடிக்கவில்லையென்பது உத்தரப் பிரதேசத்திலேயே இதுவரை வெளிவந்த தேர்தல் முடிவுகளில் ஒன்றுகூடக் காங்கிரஸுக்குக் கிடைக்காததிலிருந்து தெளிவாகிறது.

நாட்டை முன்னேற்ற வேண்டும். உலகில் இந்தியா சக்திவாய்ந்த நாடாக விளங்க வேண்டுமென்பது இந்திராவின் ஆசையாக இருக்கலாம். உற்பத்தி அதிகரித்தாலும் விலைவாசி குறைந்தாலும்கூட மனித சுதந்திரம் முக்கியமென்பது தான் இந்திய மக்களின் தீர்ப்பு.

தேர்தலில் வெற்றிபெற்றுள்ள பாபு ஜெகஜீவன்ராம் மிகப் பண்போடு. திருமதி இந்திராவை இழிவுபடுத்தும் முறையில் எவரும் பேசக்கூடாதென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறுர்.

இந்திராவின் ஆட்சி வீழ்ச்சியடைந்தற்கானகாரணங்கள் ஆசியாவிலுள்ள ஏனைய ஜனநாயக நாடுகளுக்கும், இந்தியாவில் இனி ஆட்சிபீடத்திலிருப்பவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

# இந்திய-சோவியத்உடன்பாடு தொடர்ந்து இருக்கும்!

## ஜெயப்பிரகாஷ் நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 21

ஜனதா கட்சி லோக்சபைத் தேர்தலில் வெற்றிபெற்று பதவிக்குவரும் என்பதில் ஜனதா கட்சியின் ஸ்தாபகத் தலைவர்களின் ஒருவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

பம்பாயிலுள்ள ஜாஸ்லொக் ஆஸ்பத்திரியில் அவர்அண்மையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது ''எதிர்க்கட்சியினர் வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது மாற்று அரசு ஒன்றை அமைக்கும் நிலையில் ஜனதாகட்சி இருக்கின்றது'' என்று பேட்டியொன்றில் கூறினுர்.

''ஜனதா கட்சி அமைக்கும் அரசுமுழுதும் ஜனநாயகஅடிப்படையைக் கொண்டதாகவிருக்கும் மக்கள் இழந்துவிட்ட சுதந்திரங்களையும் ஜனநாயக உரிமைகளையும் அது மீண்டும் வழங்கும்'' என்று அவர் கூறினுர்.

விவசாயத்தில் அரசு முக்கிய கவனம் செலுத்தும். சகல விதமான கிராமிய வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். கூடுமானவரை அதிகாரம் பரவலாக்கப்படும்'' என்று கூறினுர்.

''சமூகப் பொருளாதார வளர்ச்சியும் சுதந்திரம்-ஜனநாயகமும் கைகோர்த்துக் கொண்டு முன்னேறவேண்டும்'' என்று வலியுறுத்திய திரு. நாராயண்.

வங்கிகள் தேசியமயம், மன்னர்மானிய ஒழிப்பு பொதுத்துறை வளர்ச்சி ஆகியவற்றை கைவிட்டுவிடுவார்கள் என்ற கூற்றை மறுத்தார். தனியார் துறை ஏகபோகத்தை அவர் கடுமையாக எதிர்ப்பதாகவும் கூறினுர்.

''தேர்தல் தொகுதிகளில் 'உஷார் சபை'களை நியமித்து சட்டசபை, லோகசபை நடவடிக்கைகளில் மக்களுக்கு தொடர்பு ஏற்படுத்தப்படும்'' என்று அவர் கூறினுர்.

ஒவ்வொரு கிராமசபையும் ஒருவர் அல்லது இருவரை நியமிப்பதுமூலம் உஷார் சபை அமைக்கப்படும். இதுமுற்றிலும் புதிய பரிசோதனையாகும். இவை செய்யப்படும்போது தான் அவைகளின் தன்மை வெளிப்படும்'' என்ருர்.

> ''இந்திய-சோவியத் நட்புறவு உடன்பாடு கட்சி நிலைகளுக்கு அப்பாற்பட்டது என்று கருதுகிறேன் தொடர்ந்தும் அது அவ்வாறே இருந்துவரவேண்டும்.''

### இந்திய சோவியத் நட்பு உடன்பாடு

இந்திய-சோவியத் நட்புறவு உடன்படிக்கை பற்றி சில எதிர்க்கட்சி வட்டாரங்களில் சர்ச்சை கிளப்பப்படுவதுபற்றி அவர் கருத்து வெளியிடுகையில், இந்த ஒப்பந்தத்தின்படி எதிர்க்கட்சியினர் விசுவாசமாக நடந்துகொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன், அதேசமயம் இந்தியாவில் ஓர் அரசு மாற்றம் ஏற்படுவது சோவியத்தரப்பிலும் எதுவித வித்தியாசங்களைத் தோற்றுவிக்காது என்றும் நம்புகிறேன்'' என்ருர்.

வெளிநாட்டுக் கொள்கை பற்றி அவர் குறிப்பிடுகையில் ''எனதுசொந்த அபிப்பிராயம் என்னவென்றுல், அரசும் எதிர்கட்சியினயினரும் விவாதித்து பரஸ்பரம் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கையை கடைப்பிடிக்கவேண்டும். அப்படியான ஒரு உடன்பாடு ஏற்படாதபட்சத்தில் இருதரப்பினரும் தம் தம் விருப்பப்படி செய்யப்படலாம். சோவியத்- இந்திய நட்புறவு உடன்படிக்கையைப் பொறுத்தமட்டில் எதிர்க்கட்சியினர் இந்த ஒப்பந்தத்தின்படி விசுவாசமாக நடந்துகொள்வார்கள் என்றும் நம்புகின்றேன். சோவியத் தரப்பிலும் இந்தியாவில் அரசமாற்றம் ஏற்பட்டதனுல் நட்புறவு உடன்படிக்கையில் எதுவிதவித்தியாசமும் ஏற்படாதுஎன்று நம்புகிறேன் என்ருர். இந்தஒப்பந்தம் கட்சி நிலைகளுக்கு அப்பாற்பட்டது என்று நான் கருதுகிறேன். அவ்வாறே அது தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்ருர்.

திருப்திகரமான சேவையாற்ருத

# எம். பி.க்களை திரும்பவும் அழைக்கமக்களுக்குஉரிமை

## அரசியல்சாஸன திருத்தம் கோருகிருர் ஜெயப்பிரகாஷர்

பட்ன, மார்ச் 22

தெரிவு செய்யப்படும் ஆட்சிமன்ற உறுப்பினர்களை மக்கள்விரும்பாதபட்சத்தில் பதவியிலிருந்து வெளியேற்றக்கூடியவகையில்இந்திய அரசியல் சாஸனத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு இந்திய சர்வோதய தலைவரும் ஜனதா கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவருமான திரு.ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்தார்.

திருப்திகரமான சேவை ஆற்ருத ஆட்சிமன்ற உறுப்பினர்களைத் திருப்பி அழைக்கும் உரிமை பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் பற்றி கருத்து அவர்தெரிவிக்கையில், திருமதி இந்திராகாந்தியின் ஆட்சியில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை தேர்தல்முடிவுகள் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது என்ருர்.

ஜனநாயக ரீதியில் இந்திய அரசியல் அமைப்பிற்கிணங்க ஜனதா கட்சித்தலைவர் தெரிவு செய்யப்படுவார்என்று ஜெயப்பிரகாஷர் கூறினுர்.

### சட்டசபைத் தேர்தல் உடன்நடக்கவேண்டும்

மாநிலங்களில் ஒழுங்கான ஆட்சியை நடத்த விரைவில் சகல சட்டசபைகளுக்கும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் அவர் கூறினுர்.

திரு. ஜெயப்பிரகாஷர் ஜனதாகட்சி கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு இன்று அவசரமாக புதுடில்லி செல்கிருர்.

### ''ஜெகஜீவன்ராம் கட்சியும் ஜனதாவும் இணையவேண்டும்''

ஜனதாகட்சியும் ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியும் இணைந்து உறுதியான ஒரே அரசியல் கட்சியாக இயங்கவேண்டும். இதன் மூலமே இந்தியாவில் உறுதியான சிறந்த அரசு அமையும்என்றும் திரு.ஜெயப்பிரகாஷர் கூறியுள்ளார்.

லஞ்சஊழலை அகற்றுவதற்கு சுயேச்சையான பயனுள்ள அமைப்பு ஒன்று இருக்கவேண்டும் என்றும் அவர் கூறினுர்.

# தமிழ் நாட்டில் ஜனதா தோல்விக்கு எக்கட்சியும் காரணமில்லை

## தமிழ்நாடு தலைவர் விளக்கம்

சென்னை, மார்ச் 22

தமிழ்நாட்டில் ஜனதா கட்சியின் தோல்விக்குக் காரணமாக எந்த ஒருகட்சியையும் பலிக்கடாவாக்க நான் முயற்சிக்கவில்லை.

இவ்வாறு தமிழ்நாடு ஜனதாக்கட்சித்தலைவர் திரு. பா. ராமச்சந்திரன் கூறினுர்.

தி. மு. க. வுடன் கூட்டுச் சேர்ந்தால்தான் ஜனதாகட்சி தமிழ்நாட்டில் தோல்வியுற்றது என்ற அபிப்பிராயம் நிலவுவதாகப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபோதே திரு.ராமச்சந்திரன்மேற்கண்டவாறு கூறினுர்.

நாம் பலதொகுதிகளைக்கைப் பற்றுவோம் என எதிர்பார்த்திருந்தோம். ஆனல் தமிழ்நாட்டு மக்கள் தமது அபிப்பிராயத்தைச் சுதந்திரமாகத் தெரிவித்துவிட்டனர் என்றும் அவர் கூறினுர்.

### தி. மு. க- ஜனதா கூட்டணி நீடிக்குமா?

தி.மு.க.—ஜனதாகூட்டணி உறவு நீடிக்குமா என்பதை நான் ஒருவனே தீர்மானிக்க முடியாது. கூட்டணியின் எதிர்காலம்பற்றி கட்சியின் உயர்பீடமே தீர்மானிக்கும் என்றும்அவர் கூறினுர்.

7 ம் பக்கம் பார்க்க)

### இந்தியர் பிரஜாவுரிமை விவகாரம்:

# முதல் சட்டத்தை ஜி. ஜி. எதிர்த்தார்; இரண்டாவது சட்டத்தை ஆதரித்தார்

## இராஜசிங்கத்திற்கு த. கா. வா. மு. செயலாளர் பதில்

திரு. கே. ரி. இராசசிங்கம் அவர்கள்,

திரு. சி. சுந்தரலிங்கத்துடன் நீங்கள் நடாத்தும் விவாதத்தில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் அனாவசியமாக எங்கள் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைப் பற்றி சில தவறான கருத்துக்களை வெளியிட்டு அவரது புகழ் உச்சக்கட்டத்தில் இருக்கும் நேரத்தில் உருக்குலைக்கும் உங்கள் செயலை இட்டுத்தான் வருந்துகின்றேன். அவர் உயிருடன் இருக்கும்வரை காலத்திற்குக்காலம் கட்டுக்கதைகளை, கற்பனைக் கதைகளைக் கூறியுள்ள பலர் அவருக்குத் தொல்லைகொடுத்து வந்தனர். அவர் அமரராகிவிட்ட பின்பும் இல்லாதவைகளையும் பொல்லாதவைகளையும் சொல்லி அவருக்கு இழுக்குத்தேடவேண்டும் என்பது தான் உங்கள் பண்பா?

சுந்தரருக்குத் தாங்கள் 10-3-77 எழுதிய முதலாவது கடிதத்தில் 1948-ம் ஆண்டில் டொமினியன் அந்தஸ்தை எம்மை ஆண்ட இங்கிலாந்து நாட்டவர்கள் வழங்க முன்வந்தபோது, அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ்ராஜயம் கோரத் தவறிவிட்டார். அதையும் மன்னிப்போம் எனக் கூறியுள்ளீர்கள்.

### கேள்வியும் பதிலும்

இதற்கு நீங்களே 11-3-77 விவாதமேடை மூலம் பதில் கொடுத்துள்ளீர்கள்.

1947 நவம்பர் 20-ம் திகதி குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கு பின்வருமாறு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தந்திமூலம் அறிவித்தார்.

இலங்கை வாழ் தமிழ்மக்கள் சோல்பரி அரசியல் யாப்பை நிராகரித்துவிட்டனர். ஒற்றையாட்சி அரசு தற்போதைய சட்டம் இயற்றும் நிர்வாகத் துறை ஆகியவற்றின் அமைப்பை அறவே தமிழ்மக்களுக்கு பெற்றுக்கொள்ள முடியாமைக்கும் திருப்திகரமான மாற்றுத் திட்டம் இல்லாதவகையில் தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குமாறு கோருகிறோம்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் 1947-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் திகதியே தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கோரியுள்ளார் என்பதை நீங்களே தெரிவித்து இருக்கின்றீர்கள். பின்ஜிஜி யை குறைகூறுவதில் அர்த்தமுண்டா? திரு. ஜி ஜி. பொன்னம்பலம் ஆரம்பத்திலேயே தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டுமென வலியுறுத்தினர். தமிழ்க்காங்கிரசின் அடிப்படைக் கொள்கையில் அவும் ஒன்று. 1951-ம் ஆண்டு ஆசிமன்றத்தில் தனித்தமிழ்நாடு தீர்மானத்தை திரு. சி. சுந்தரலிங்கம் கொண்டுவந்தபொழுது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆமோதித்தார். யாழ்ப்பாணத்தில் 1956-ம் ஆண்டு தேர்தல் முடிவுகள் அறிவித்தசமயம் தமிழ் மக்களுக்கு தனிஅரசு வேண்டுமென்றால் இந்ததமிழ்க் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலத்தினல்தான் முடியும் என்று திரு. பொன்னம்பலம் பகிரங்கமாகக் கூறினர்.

### மாநாட்டில் தீர்மானம்

பின் 1967 தமிழ்க்காங்கிரஸ் பருத்தித்துறை மகாநாட்டில் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி அங்கத்தவர் திரு. எஸ். மகேந்திரராசா கொண்டுவந்த, இன்னும் சில வருடங்களுக்குள் தமிழர் உரிமை கிடைக்காவிட்டால் தனித்தமிழ்நாட்டுக்காக தமிழ்க்காங்கிரஸ் போராட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது. இத் தீர்மானத்தை ஆதரித்து பேசிய நம் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இதற்காக தமிழ் இளைஞர்கள் போராடவேண்டுமென்றார். இறுதியாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக தெரிவுசெய்யப்பட்ட திரு. ஜி. பொன்னம்பலம் தனிநாட்டுக் கோரிக்கையை பலப்படுத்தினர்.

### நீதிமன்றத்தில் தனிநாடு

தமிழ்த்தலைவர்களின் ட்ரயல் அட்பார் வழக்கில் கூட திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கையின் அத்தியாவசியத்தை வலியுறுத்தினர்.

எடுத்த எடுப்பிலே எந்த உரிமையும் கிடைத்துவிடாது. அதற்கான நேரம் காலம் வர வேண்டும். மக்கள் ஆதரவு வேண்டும். ஆதலால் நீங்கள் 1948ல் தமிழ்ஈழத்தைபிரித்துத் தருமாறு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கோரத் தவறிவிட்டார் என்பதில் அர்த்தமில்லை. அவர் 1944-ம் ஆண்டு முதலே தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடிவந்தார்.

### திராவிடநாடு கோரிக்கை

இந்தியாவில் 1938-ம் ஆண்டுமுதலே திராவிடநாடு திராவிடருக்கே என்று பெரியார் ஈ. வே, ரா. போராடி வந்தார். அதன்பின் அறிஞர் அண்ணாதுரையின் தலைமையில் தி. மு. க. வும் போராடி வந்தது. ஆனால் அவர்களால் திராவிடநாடோ அல்லது தமிழ்நாடோ பெறமுடியவில்லை. ஜின்னாவினல் தனிநாடு பெறமுடிந்தது. காரணம் முஸ்லீம்கள் ஜின்னாவின் கீழ் ஒற்றுமையாக நின்றார்கள். ஆனால் தென்இந்திய மக்கள் சுதந்திரத்துக்கு போராடிய காங்கிரஸுடன் நின்றார்கள். அதனால் அன்று திராவிட நாடு பெறமுடியவில்லை. இதனால் பெரியாரையும் அறிஞர் அண்ணாவையும் இன்றுள்ள தமிழ்நாட்டு மக்கள் குறைசொல்ல முடியுமா? அன்றைய தமிழ்த் தலைவர்களைக் குறைகூறுவதினால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. அவர்கள் தவறுவிட்டிருந்தால் அவை இன்றைய இளைய தலைமுறைக்கு ஒரு பாடமாக அமையுமே தவிர தவறுதல்கள் நிவர்த்தியாகமாட்டாது. அப்படியானல் இலங்கை வேந்தன் இராவணன் எல்லாளமன்னன், சங்கிலிமன்னன் ஆகியோரும் தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றி யோசித்துநடக்கத்தவறிவிட்டார்கள் என்று குறைகூற முடியுமா?

### இரண்டு சட்டங்கள்

இந்திய பாக்கிஸ்தானிய பிரஜா உரிமைச்சட்டம் இந்நாட்டில் வாழ்கின்ற 15 லட்சம் இந்திய வம்சாவழி தமிழர்களை நாடற்ற பிரஜைகள் ஆக்கியது என்று நீங்கள் கூறுவது பெரிய தவறாகும். (Citizenship Act of 1948) பிரஜாஉரிமை மசோதாவே இந்திய வம்சாவழியினர்களை நாடற்ற பிரஜைகளாக் கியது இதனை திரு. ஜி. ஜீ. பொன்னம்பலம் எதிர்த்து வாக்களித்தார். (Indian Pakistan Residents (Citizenship Act of 1949) இந்திய பாக்கிஸ்தானிய பிரஜாஉரிமைபறிக்கப்பட்டவர்களுக்கு பிரஜாஉரிமை கிடைக்க வழிசெய்யும் சட்டமாகும். இச்சட்டத்தையே திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆதரித்து வாக்களித்தார்.

### சுந்தரர் பதிலில்

திரு. சி. சுந்தரலிங்கம் 12-3-1977 தங்களுக்கு எழுதிய பதிலில் இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமைச்சட்டம் பற்றி குறிப்பிடுகையில் அந்த மசோதா வந்தபொழுதுதான் வாக்களிக்காமல் வெளியேறிவிட்டதாகவும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மசோதாவுக்கு வாக்களித்தார் என்பதும்முற்றிலும் உண்மை. ஏற்கனவே பிரஜா உரிமை பறிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பிரஜாஉரிமை பெற்றுக் கொடுக்கவே ஜி. ஜி. வாக்களித்தார்.

### விவாதமேடை

2-4-1948ல் இலங்கை சுதந்திரமடைந்தது. அதனைத் தொடர்ந்தே பிரஜா உரிமைப் பிரச்னை எழுந்தது. 1948ல் இலங்கை வாழ் இந்தியர்களின் பிரஜாஉரிமை பறிக்கும்சட்டத்துக்கான மசோதா (Citizenship act of 1948) பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்த பொழுது திரு. ஜி. ஜி பொன்னம்பலம் எதிர்த்து வாக்களித்தார். அந்தச் சமயம் ஜி. ஜி. பொன்னம்பலம் அரசாங்கத்துடன் சேராமல் தமிழ்க்காங்கிரஸ் தனித்து இயங்கியது. பின்பு பிரதமர் டி. எஸ். சேனநாயக்காதான் தமிழ்க்காங்கிரஸின் கோரிக்கைக்கு இணங்குவதாகவும் பிரஜாஉரிமை ச் சட்டத்தில் செய்த தவறை நிவர்த்திசெய்வதாகவும் கொடுத்தவாக்குறுதியை தொடர்ந்து 1949ம் ஆண்டு தமிழ்க் காங்கிரஸ் யு. என். பி. யுடன் சேர்ந்து கூட்டாட்சி நடத்தியது. அதன் பின்பே 1949ல் இரண்டாவது பிரஜா உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்படி (Indian Pakistani R sidents (Citizenship) act of 1949) பிரஜா உரிமை பறிக்கப்பட்டவர்களில் கலியாணமானவர்கள் இலங்கையில் ஏழு வருடம் வாசம் செய்திருந்தால் அவர்களுக்கும் கலியாணமாகாதவர்கள் இலங்கையில் 10 வருடத்துக்குமேல் வசித்து இருந்தால் அவர்கட்கும் பிரஜாஉரிமை வழங்கப்படும் என்று இருக்கிறது. இச் சட்டத்தால் இலங்கை வாழ் இந்தியர்களின் 75 வீதமானோருக்கு பிரஜாஉரிமை கிடைக்கும் என அக்காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இரண்டாவது சட்டத்துக்கே வாக்களித்தார். இச்சட்டப் பிரகாரம் சம்பந்தப்பட்டவர்கள் இச்சட்டம் அமுலாகும் திகதியிலிருந்து 24 மாதங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் அக்காலத்தில் சிலர் இச்சட்டம் அமுலாவதைத்தடுத்து பிரசாரம் செய்ததினல் 18மாதகாலமாக இச்சட்டத்தை இந்திய வம்சாவளியினர் பகிஷ்கரித்தனர். முன்னைய சட்டத்தினல் பிரஜாஉரிமை இழந்த பலர் இரண்டாவது சட்டத்தினல் பிரஜாஉரிமை பெறமுடியாமல் போனதற்கு காரணம், இந்தப் பகிஷ்கரிப்பே ஆகும்.

### பிரஜாஉரிமை பெற்றனர்

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆதரித்து வாக்களித்த இச்சட்டத்தின் மூலம் பலர் பிரஜா உரிமை பெற்றுள்ளனர்.

14-3-77 தாங்கள் சுந்தரருக்கு எழுதிய பதிலில் கூட பிரஜாஉரிமைச் சட்டம் பற்றி தவறாக வியாக்கியானம் செய்துள்ளீர்கள். "திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்இந்தியவம்சாவழியினரின் பிரஜா உரிமை பறிபோகும்சட்டத்துக்கு வாக்களித்தார்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள்" என சுந்தரருக்கு எழுதியுள்ளீர்கள். ஆனால் சுந்தரர் எந்தச் கடிதத்திலாவது திரு. ஜி. ஜி. இந்திய வம்சாவழியினரின் பிரஜாஉரிமைபறிபோக வாக்களித்தார் என்று கூறிவில்லை. அது உங்கள் மனதில் உதித்த தவறான கருத்தாகும்.

நீங்கள் இலங்கை அரசியலை அறம்புறமாக வாசித்துள்ளீர்கள் என உங்களைப்பற்றிசுந்தரர் கூறியது தவறில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

### தமிழ்நாட்டை உருவாக்கினர்

14-3-77 கடிதத்தில் அன்று வாழ்ந்த அரசியல் தலைவர்கள் எதிர்காலம்பற்றி தூரதிர்ஷ்ட பார்வையற்றவர்கள் என்று குறைகூறுகின்றீர். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ்மக்களின் எதிர்கால வாழ்வுக்காகவே 1944ம் ஆண்டுதமிழருக்கென ஒரு தனிக்கட்சி ஆரம்பித்து, தமிழர்களை ஒன்று திரட்டினர். அன்றுசுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைமுன் வைத்தார். அது இன்று வளர்ந்து விஸ்தரித்து 'தனித்தமிழ்நாடு' என்ற நிலைக்குவந்துவிட்டது. எதிர்காலத்தில் இங்கு ஒரு 'தனித்தமிழ்நாடு' அமையும் என்பதை அவர்உணர்ந்து அரசாங்கத்திலிருந்தபோது தமிழ்ப் பகுதிகளில் மூன்று தொழிற்சாலைகளை (காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, வாழைச்சேனை காகித ஆலை, பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை) உருவாக்கினர். தமிழ்பிரதேசங்களில் பல அபிவிருத்திகளைச்செய்து பொருளாதார ரீதியில் தமிழ்மக்களை பலப்படுத்தி ஒற்றுமை ஏற்படுத்தினர். இதை தமிழினம் என்றும் மறக்காது.

ஆர். பரமேஸ்வரன்
செயலாளர், தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணிக்கிளை,
சாவகச்சேரி.

## ஆலோசனை

உடுப்பிட்டி, செவ்.

வடமராட்சிப் பகுதியில் விவசாயிகளுக்கு உதவும் முகமாக "ரோமு" ஸ்தாபனத்தினர் கமத்தொழில் ஆலோசனைகளையும், உதவிகளையும் இலவசமாக அளித்து வருகின்றனர். 'ரோமு' கமத்தொழில் ஆலோசகர் திரு. க. பொன்னையா, புலோலி விவசாயப் போதனாசிரியர் திரு. ஆர். தில்லையம்பலம் தலைமையில் மந்திகையிலுள்ள தோட்டமொன்றில் புகையிலைக்கு வரும் கரடிச் சுருள் நோய்க்கு 'மங்கோசெப்' பங்கசு நாசினியைப் பரீட்சார்த்தமாகப் பரிசோதனை செய்து காட்டினர். (உ)

## இன்று விவசாய இலவச ஆலோசனை

நல்லூர், புதன்

விவசாயப் பயிர்களைத்தாக்கும் நோய்கள் பற்றியும் அவற்றைத்தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் இலவச ஆலோசனைகளை விவசாயிகளின் நலன் கருதி யாழ்ப்பாணம்-ரோமு ஸ்தாபனம் அளித்துவருகிறது.

இன்று புதன்கிழமை மேற்படி ஸ்தாபனத்தில் விவசாய நிபுணர்களின் ஐந்தாவது தொடர் ஆலோசனைகளை கேட்டுப் பயன்பெறுமாறு விவசாயிகளை ரோமு ஸ்தாபனத்தின் கமத்தொழில் ஆலோசனைப் பகுதி அறிவித்துள்ளது. (உ)

## 4 மாதிரிக் கிராமங்கள் தெரிவு

உடுப்பிட்டி, செவ்.

புலோலி கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழுப் பரப்பெல்லைக்குள் மேட்டுநிலப்பயிர் அளவீட்டை யாழ். மாவட்டப் புள்ளிவிபரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர். இம் மேட்டுநிலப்பயிர் அளவீட்டிற்கெனப் புலோலிகமத் தொழில் விளைவுப் பெருக்கக் குழுவின் கீழுள்ள நான்கு பயிர்ச்செய்கைக் குழுக்களிலிருந்தும் மாதிரிக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நெல்லியடிப் பயிர்ச் செய்கைக்குழுப் பகுதியில்கரவெட்டி வடக்கு என்னும் கிராமமும், உடுப்பிட்டிப் பயிர்ச்செய்கைக் குழுப்பகுதியில் உடுப்பிட்டிக் கிராமமும், கட்டைவேலிப் பயிர்ச்செய்கைக் குழுப் பகுதியில் துன்னாலை வடக்குக் கிராமமும், புலோலி பயிர்ச் செய்கைக்குழுப் பகுதியில் அல்வாய் மேற்குக் கிராமமுமே தெரிவுசெய்யப்பட்ட மாதிரிக் கிராமங்களாகும். (ஆ)

## இந்தியத்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### சுதந்திரவீரர்

பிரதமர் இந்திரா காந்தி போட்டியிடும் ரேபரேலி தொகுதியிலுள்ள வாக்களிப்பு நிலையமொன்றுக்கு அதிகாலையிலேயே ஒருவர் வாக்களிக்க வந்திருந்தார். விசாரித்த போது, தனது பெயர் சுரேந்திர பகதூர்சிங் என்றும்கடந்த எல்லா தேர்தல்களிலும் தான் தான் 'கியூ'வில் முதலில் நின்று வாக்களிப்பதாகவும், தாம் ஒரு சுதந்திரப்போராட்ட வீரர் என்றும் கூறினர்.

### பெரிய குடும்பம்

கர்னடகாவில்உள்ள வடக்கு கனராவில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த 90 வயது கிழவர் சுமார் இரண்டு மைல்தூரம் நடந்து வந்து வாக்களித்தார். இவருடன், இவரது குடும்பத்தைச் சேர்ந்த 40 பேர் வாக்களிக்க வந்திருந்தனர். இந்தக் கிழவருக்கு 20 குழந்தைகளும் 60 பேரன், பேத்திகளும் இருக்கின்றார்கள்.

### வாக்களிக்க மறுப்பு!

நாகப்பட்டினம். மேல அவரிக்காடு கிராமத்தைச் சேர்ந்த 800 (மீனவர்) வாக்காளர்கள் இன்று வாக்களிக்க மறுத்தனர். தங்களின் கோரிக்கைகளை உள்ளூர் அரசியல் கட்சிகள் ஏற்கவில்லை என்று காரணம் கூறினர்?

### பெயர் எங்கே?

வாக்காளர் பட்டியலில் பலரது பெயர்கள் இம்முறைஇடம் பெறாதிருந்தது! மேற்கு வங்காள மாநில கவர்னர் திரு. ஏ. எஸ். டயஸின் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கவில்லை. இதே போல, பிரபல வங்காள சினிமா டைரக்டர் மிருணாள் சென் பெயரும் இடம்பெற்றிருக்க வில்லை.

# ஜி.ஜியின் துணிவும் பணிவும்
## நம் தமிழ் இளைஞர்க்கு வேண்டும்

— உணர்ச்சிக்கவிஞர்

யாழ்ப்பாணம், புதன்

'தந்தை செல்வநாயகம் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தொண்டராக இருந்திருக்கிறார். அதேவேளை அமரர் ஜி. ஜி.யும் தந்தை செல்வநாயகத்தின் தொண்டராகவும் இருந்திருக்கிறார்' என்று கவிஞர் காசி ஆனந்தன் அல்வாயில் நடைபெற்ற அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கவிஞர் தமது உரையில் கூறியதாவது: 'தமிழ் இளைஞர்கள் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திடம்இருந்து இரு குணாதிசயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை அமரர் ஜி. ஜி.யின் துணிவும், பணிவுமாகும்.

அவர் நினைத்ததை முடிப்பவர். எடுத்த காரியத்தை செயலாக்கும் துணிவு அவரிடம் இருந்தது. அதேநேரம் அவரிடம் பணிவும் இருந்தது.

பொறுப்புவாய்ந்த விடுதலை இயக்கம் ஒன்றில் பணியாற்றும் தமிழ் இளைஞர்களுக்குத் துணிவும் அதேவேளை பணிவும் அவசியமானது.

1944ம் ஆண்டுக்கும், 1948ம் ஆண்டுக்கும் இடையில் அமரர் ஜி. ஜி.யின் தொண்டராக தந்தை செல்வநாயகம் இருந்தார்.

1972ம் ஆண்டு தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டபோது தமிழ்க் காங்கிரஸை அமரர் ஜி. ஜி. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைத்துக்கொண்டு கூட்டணியின் தலைவராக இருந்த தந்தை செல்வநாயகத்தின் தொண்டராக இருந்தார்.

1976ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் கூட்டணித் தலைவர்களாக தந்தை செல்வநாயகம், அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி நான்கு ஆண்டு காலம் தந்தை செல்வநாயகத்தின் தலைமையை அமரர் ஜி. ஜி. ஏற்றிருந்தவர்.

அமரர் ஜி. ஜி.யிடம் துணிவு மட்டுமல்லபணிவும் இருந்தது. அவரது வெற்றிகளுக்கு இவை தான் காரணம். நமது இளைஞர்கள் இந்தப் பண்பைக் கடைப்பிடிக்கவேண்டும்; (உ)

# "இலட்சிய அடிப்படையில் இயக்கம் வளர வேண்டும்"
## சாவகச்சேரியில் 'அமிர்'

மட்டுவில், செவ்.

"ஒரு சிலரிலே நம்பிக்கை வைத்து நமது இயக்கத்தைக் கட்டி வளர்க்க முடியாது. தலைவர்கள் வருவார்கள், போவார்கள். ஒரு இலட்சியத்தின் அடிப்படையிலேயே இந்த இயக்கத்தைக் கட்டி வளர்க்க வேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

"தமிழர் மத்தியிலே மாற்ற முடியாத ஒரு முடிவுக்கு கூட்டணி வந்துள்ளது. தமிழ் இனத்தைச் சுதந்திரமாக வாழ வைப்பதே கூட்டணியின் இலட்சியமாகும். அமரர் ஜி. ஜி. யின் இறுதி மூச்சு ஒற்றுமை, தமிழ் இனத்தின் விடுதலை, தன்மானம். இந்த மேதையின் இறுதி இலட்சியக் கோரிக்கையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எப்படியும் நிறைவேற்றியே தீரும்; இது ஒரு தேர்தல் இயக்கமல்ல" என்று திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறினார்.

சாவகச்சேரிச் சந்தை மைதானத்தில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:-

"தேர்தல்இயக்கமல்ல என்று நான் கூறியதால் பாராளுமன்றத்துக்கு இளைஞரை மட்டும் இயங்கும் ஒரு இயக்கம்தான் இது என்று எண்ணிவிடக் கூடாது.

1972-ல் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோது பேரவையில் 19 தமிழ் உறுப்பினர் இருந்தனர். இதில் 15 பேர் அதைப் பகிஷ்கரித்தனர். 4 தமிழ் உறுப்பினரின் கையொப்பத்துடன் அரசியல் அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்வரும் தேர்தலில் இந்த 4 பேரும்தான் தமிழ் மக்களின் ஏகபோகப் பிரதிநிதிகளல்ல என்பதை நிரூபிக்கவேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 40 இடங்களில் முஸ்லிம் மக்கள் இன்னல்களுக்காளானர்கள். புத்தளத்தில் நடந்த சம்பவம், அம்பாறையில் முஸ்லிம் மக்களின் நிலங்களை எடுத்து சிங்களவர்களுக்கு வழங்கிய சம்பவம் இவற்றுள் சில.

இந்த இன்னல்களின் விளைவாக முஸ்லிம் மக்களின் மத்தியில் ஐக்கிய முன்னணி உருவானது. அந்த ஐக்கிய முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இன்று தமிழ் ஈழ விடுதலைக்காக முன்வந்து உடன்படிக்கை செய்துள்ளது." மற்றும் பலரும் பேசினர்.

# "தமிழரசில் சேர்ந்து போராடியதால் அன்று வீட்டிலிருந்து விரட்டப்பட்டேன்"

வவுனதீவு. செவ்.

'நான் அரசாங்கசேவையில் சேர்ந்து ஐந்து ஆண்டுகாலங்களில் சுமார் நாற்பது ஆயிரம் ரூபா சம்பாதித்தேன். ஆனால் இப்பணத்தில் ஒருசதம்கூட எனது வீட்டுக்குக் கொண்டு செல்லவில்லை. ஆயினும் அப்பணத்தில் மூன்று அன்னுசிப் பழங்களை வாங்கிவந்து எனது தாயாருக்குக் கொடுத்துள்ளேன்'.

மேற்கண்டவாறு தமிழ்இளைஞர் பேரவை அமைப்புத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி இணைச்செயலாளர்களில் ஒருவருமான கவிஞர் காசி ஆனந்தன் மட்டக்களப்பு மாநகரசபையின் 12-ம் வட்டாரமானகூளாவடிக் கொலனி தமிழர் விடுதலைக் கூட்டணியினராலும், இளைஞர்பேரவையினராலும் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசியவாவது:-

'எனது சமுதாயம் மற்றைய சமுதாயங்களைவிடத் தாழ்ந்தது. இந்நிலையை மாற்றி ஏனைய சமூகங்களைப்போன்று சமத்துவமாக வாழவேண்டுமென்பதற்காகவே கடந்த 25 ஆண்டுகளாகத் தமிழின விடுதலைப்போரில் ஈடுபட்டுவருகிறேன். தமிழரசுக் கட்சியில் சேர்ந்து அதன் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தநான் வீட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு எங்கு போவதென அறியாது நீதிமன்றத்தடியில் உள்ள அரசமரத்துப் பிள்ளையார்கோவிலில் 'சேகு' என்று அழைக்கப்பட்ட மனநோயாளியுடன் எனது காலத்தைக் கழித்தேன்.

'மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்திலிருந்த 'பொலிஸ் கந்தோருவ' எனச் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்ததைத் தார் பூசி அழித்தசமயம், பொலிஸ் அதிகாரி எனது நெஞ்சில் குத்தியதால்காசநோயால் பீடிக்கப்பட்டு பலதடவைகள் வைத்தியம் செய்துவந்தேன்.

1961-ம் ஆண்டில் சத்தியாக்கிரகம் நடைபெற்றசமயம் இந்தியாவில் படித்துக்கொண்டிருந்தேன். ஆயினும் அறிஞர் அண்ணா இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக மெரினா கடற்கரையில் ஆர்ப்பாட்டக் கூட்டம் நடாத்தியபோது அவருடன் சேர்ந்து வீதி வீதியாகக் கூட்டம் நடாத்தி இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தேடினேன். ஒருசமயம் குன்றத்தூரில் பேசிக்கொண்டிருந்த சமயம் இரத்தம் என்வாயினுல் வந்தது.

1965-ம் ஆண்டு இலங்கை திரும்பியதும் தமிழின விடுதலை இலட்சியப் போரில் என்பங்கைச் செலுத்தத் தவறியதில்லை. இவ்வாறு காசநோய் என்னைப்பீடித்து வருத்தி உடல் மெலிந்து எனது உடலில் ஓடுவது மருந்தா இரத்தமா என்ற நிலையிலும் எனது இலட்சியத்தைத் தொடர்ந்திருக்கிறேன். வைத்தியர்களின் ஆலோசனைப்படி கொழும்பில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய பொழுது தமிழ்த்தாய் மன்றத்தை உருவாக்கி நண்பர்கள் கரிகாலன், ஈழவேந்தன், அளவெட்டி மு. திருநாவுக்கரசு ஆகியோருடன்சேர்ந்து உழைத்தேன். நான் பெற்ற சம்பளத்தைக்கொண்டு தமிழ்த்தாய் மன்றத்தைச் சிதறவிடாது கட்டிக்காத்து அதற்குஎன் உழைப்பையே தீனியாகப் போட்டு வளர்த்தேன்'.

இக்கூட்டத்தில் பிரபல வர்த்தகரும் முன்னாள் மாநகராட்சி மன்ற உறுப்பினர் (கவிஞர்முத்தழகு) திரு. அ. அந்தோணிமுத்து, தமிழரசுக் கட்சித் துணைச்செயலாளர் திரு. வ. பாலசிங்கம், பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. க. மதுரநாயகம், கவிஞரின் தம்பி திரு. திரு. க. சுதர்சன் ஈழவேந்தன் ஆகியோரும் உரையாற்றினர். கவிஞர் காசிக்கு 'இளைஞர் சக்கரவர்த்தி' என அங்கு பட்டம் சூட்டப்பட்டது. இக்கூட்டம் த. இ. பேரவையைச் சேர்ந்த திரு. க. யோகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. (அ)

# 'ஆசிரிய உலகுக்கு அளப்பரிய சேவை செய்தார் ஜி. ஜி.'

யாழ்ப்பாணம், புதன்

'ஆசிரியர்களோ ஆசிரியர் சங்கங்களோ கொடுக்கும்முறையீடுகளை ஆராய்ந்து சிந்தித்து கல்விப் பகுதியிற் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி நல்ல பயனைப் பெற்றுக்கொடுத்தவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஆசிரியர் இடமாற்றம், பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் இல்லாதிருந்த பிரச்சினை உட்பட முக்கிய விஷயங்களை முன்னிருந்த அரசாங்கப் பிரதமர் தலைமையில் கல்விப்பகுதி ஊழியர்கள் உள்ளிட்ட பலர் முன்னிலையில் ஆட்சி மன்றத்தில் கூட்டிய விசேஷ மகாநாட்டில் தமது சகாக்களுடன் தக்க புள்ளிவிபர அடிப்படையில் இருநாட்களாகத் தொடர்ந்து வாதாடி ஆசிரியர் சமூகத்துக்குப் பெருநன்மை பெற்றுக் கொடுத்தார். இந்த அரசாங்கத்திலும் நன்மை பெற்றுக் கொடுத்தார். ஆசிரியர் உலகுக்குச் சிறந்த வழிகாட்டியாயும், பிரபல கல்விமானாயும் திகழ்ந்த பெரியார் பொன்னம்பலத்தின் மறைவு ஆசிரிய உலகுக்குப் பேரிழப்பாகும்'

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கோப்பாய்க் கிளையின் நிர்வாக மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசிய சங்கத் தலைவர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவையொட்டிய அனுதாபத் தீர்மானத்தையடுத்து இரு நிமிஷ மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்கச் செயலாளர் திரு. சி. சிவானந்தம் சங்க அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

இடமாற்றம், கடன்பெறுதல் இவற்றுக்கு விண்ணப்பித்தவர்கள் விஷயமாயும், சில்வா சம்பளக் கமிஷன் சிபார்சுகளின் படியும் சமசம்பளத்திட்டத்தின்படியும் பாக்கிச் சம்பளம் பெற்றுக்கொள்ளாத ஆசிரிய அங்கத்தவர்கள் விபரங்களைச் சேகரித்து அதுதொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டியன செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

கொடிகாமத்தில்

# 3 லட்ச ரூபாவில் நவீன சந்தை!

சாவகச்சேரி. செவ்வாய்

மூன்று லட்சம் ரூபாவைக் கொண்டு கொடிகாமத்திலுள்ள சந்தையை நவீன முறையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென கச்சாய் கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கிராமசபைத் தலைவர் திரு. இ. செல்லையா தலைமையில் கூடிய கூட்டத்தில் இச்சந்தையை அமைப்பதற்கான வரைபடம், மதிப்புத்திட்டம். நிலஅளவு என்பவற்றையும் செய்வதற்கு நடவடிக்கைஎடுக்கப்படவேண்டுமெனவும் அத்திவாரக்கல்லை அடுத்தமாதம் நாட்டுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

கச்சாய் கிராமசபையால் நடத்தப்படும் அல்லாரை பாலர் பாடசாலை ஆசிரியைக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அனுவதித்துள்ளமாதச் சம்பளத்தை இம்மாதம் முதல் வழங்கவேண்டுமென்றும், மின்சாரம் வழங்கும் திட்டத்தை சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக்கொண்டு இவ்வாண்டிற்குள் செயற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க-அ)

...

## இவ்வீதி விஸ்தரிக்கப்பட்டது

வண்ணார்பண்ணை, செவ்.

யாழ்ப்பாணம் இராசவீதியையும் திருநெல்வேலி கிராம விஸ்தரிப்புத் திட்டத்தையும் இணைக்கும் பிரதான வீதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அபிவிருத்தி வேலைப்பகுதி அத்தியட்சகர் திரு. எஸ். மாயாத்திரவியம், காணி உரிமையாளர் திரு. பூபாலசிங்கம் ஆகியோர் இவ்விஸ்தரிப்பை மேற்கொண்டனர்.

250 யார் நீளமான இவ்வீதிக்குத் தார்போடுவதற்கான நிதி அரசாங்க அதிபரினுல் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதை விரைவில் செய்து முடிப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. கே. ரி. சம்பந்தர் செய்துவருகின்றார்.

இத்திட்டத்தில் வீடுகள் கட்டத் தொடங்கியுள்ளவர்களுக்கு வீடுகட்டுவதற்கான நிதிஉதவியை வழங்குமாறு இத்திட்டத்தின் அபிவிருத்திச் சங்கம் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது. கிணறு வெட்டும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

நெல்லியடிப் பகுதியில்

# குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றனவாம்

பருத்தித்துறை. செவ்.

நெல்லியடிப் பொலிஸ் நிலையம் மூடப்பட்டு அங்கு கடமையாற்றிய பொலிசார் பருத்தித்துறைக்குமாற்றப்பட்டதையடுத்து, நெல்லியடி சுனுவில், கரவெட்டி ஆகிய பகுதிகளில் ஒழுங்கீனங்கள் திருட்டுகள், குடிபோதைச் சம்பவங்கள் ஆகியன மலிந்துள்ளதால்மீண்டும் நெல்லியடியில் பொலிஸ் நிலையத்தைஆரம்பிக்கும் முயற்சியில் கரவெட்டிப் பகுதிப் பிரமுகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது காரணமாக பருத்தித்துறைப் பொலிசார் இனிமேல் இப்பகுதியில் தீவிர ரோந்து சுற்றுவதாகத் திட்டமிட்டுள்ளனர். குறிப்பாக சினிமா இரண்டாம் காட்சிக்குப் பின் திரும்பும் பலர்மீது பொலிசாரின் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. குடிவெறியில் திரிபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் தெரிகிறது. [அ]

# மெய்வல்லுநர் போட்டி

உடுப்பிட்டி, செவ்.

உடுப்பிட்டி கல்வி, வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கரவெட்டி திருஇருதயக்கல்லூரி கீழ்ப்பிரிவில் ஆண்கள் முதலாமிடத்தையும், பெண்கள் இரண்டாமிடத்தையும், மேற்பிரிவில் ஆண்கள் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. (உ)

.........

## . சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இணைப்பு . நிதிச்சங்கத்தில் கொழும்பு ஆறுமுகநாவலர் சபையும் அங்கத்துவச் சங்கமாக இணைந்துள்ளது.

இலங்கையில் உள்ள உள்ள எல்லா மதநிறுவனங்களில் இருந்து வரும் பிரதிநிதிகளைக் கொண்ட இச்சங்கம் தாம் செயற்படுத்தப்போகும் திட்டங்களையும் நேரில் விளக்கும் பொருட்டு அடுத்த மாதம் 2ம் திகதி சனிக்கிழமை காலை நல்லூர் நாவலர் நிலையத்தில் கூட்டம் ஒன்றினை நடாத்தவிருக்கிறது. (உ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
எங்க பாட்டன சொத்து

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
ஜெய்சங்கர்
எல். விஜயலக்ஷ்மி
உயிரா மானமா

7-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

RIO (Jaffna) LAST DAY Daily 4 Shows
HELL TO ETERNITY
(Color)
Grand Release From 24-3-77
COUNT OF MONTECHRISTO

REGAL (JAFFNA)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
LESLIE PHILLIPS in
SOME WILL, SOME WON'T
(Color)

ராணி [யாழ்நகர்]
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
தினசரி 4 காட்சிகள்
நல்ல நேரம்
(புத்தம் புதிய பிரதி)

ராஜா [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
லலிதா - பாலையா
கடைசி 2 தினங்கள் நடித்த
தூக்கு தூக்கி (புதிய பிரதி)
25-3-77 முதல் இருவர் உள்ளம்

வின்ஸர் (யாழ். நகர்)
அடுத்த வெளியீடு
சிவாஜி (இரு வேடங்களில்)
சௌகார் ஜானகி; உஷா நந்தினி,
வி. கே. ராமசாமி, சசிகுமார்
நடிக்க
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: P. மாதவன்

கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
அபூர்வ ராகங்கள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா சுந்தரராஜன்
நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் இப்பொழுது நடைபெறுகிறது
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் சுஜாதா
ஸ்ரீகாந்த் மனோரமா
நடித்த
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவகுமார்—ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
(புதிய பிரதி)

## மின் விநியோக ஆரம்ப விழா

பண்டத்தரிப்பு, செவ் சண்டிலிப்பாய்க் கிராம மின் விநியோகத்திட்ட அங்குரார்ப் பணவிழா இம்மாதம் 25மதிகதி வெள்ளிக்கிழை மாலை நடை பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் இணக்க சபைத்தலைவர் திரு. நா.கண பதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழா வில் உடுவில் தொகுதி சுதந்தி ரக் கட்சி அமைப்பாளர் திரு. கு.விநோதன் மின்சார இணைப்பைச் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைப் பார்.

மானிப்பாய்க் கிராமசபை விசேஷ ஆணையாளர் திரு. சி.கே.இலங்கைராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொள் வார். (உ)

## நூலகத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்க நூலகக்கட்டிடத்தை இம்மா தம் 26ம்தேதி காலை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் தூதரா லய முதற்செயலாளர் செல்வி உர்சுலாமுல்லர் திறந்துவைப் பார். கல்லூரி அதிபர் திரு. மு.வெற்றிவேலு தலைமையில் இத்திறப்பு விழா நடைபெ றும். (க)

## 'சீநோர் கிளை நெடுந்தீவில் நிறுவுக''

நெடுந்தீவு, செவ்வாய் ஆழ் கடல் மீன்பிடிக்கு ஏற்ற இடமாக நெடுந்தீவு இருப் பதால் சீநோர் ஸ்தாபனத்தின் கிளை நிலையம் ஒன்றை இங்கு நிறுவுவதன் மூலம் நெடுந் தீவின் வளர்ச்சிக்கும் பொரு ளாதாரவிருத்திக்கும் இளைஞர் களின் எதிர்காலத்திற்கும் உதவியளிக்க முன்வருமாறு நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் சீநோர் ஸ்தாபனத்தைக் கோரி யுள்ளது. பொருளாதார அபி விருத்திக்கும் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்களுக்கும் உத வக்கூடிய வகையில் நெடுந் தீவில் கிளை நிலையம் ஒன்றை நிறுவுவது பயனுள்ளதாக அமையும் எனவும் கழகம் தெரிவித்துள்ளது. (அ)

## பஹுகுணா தம்பதிகள் வெற்றி

புதுடில்லி மார்ச் 22 உத்தரப் பிரதேச மாநிலத் தில் லக்னோ தொகுதியில் ஜனநாயக காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட முன்னாள் காங் கிரஸ் முதல் அமைச்சர் திரு எச். எம். பஹுகுணாவும் புஹுல்பூர் தொகுதியில் போட்டியிட்ட அவரது மனைவி திருமதி கமலா பஹுகுணாவும். வெற்றி பெற்றுள்ளார். (இ)

## தமிழ்

(4-ம் பக்கத் தொடர்ச்]

### எம். ஜி. ஆர் அலைபற்றி கருத்து

எம். ஜி. ஆர். அலை தமிழ் நாட்டில் அதிகம் வீசியதால் தான் ஜனதாகட்சி தோற்று விட்டது என்பதற்கில்லை. தமிழ்நாட்டில் மட்டும் ஜனதா கட்சி பாதிக்கப்படவில்லையே என்றும் அவர் கூறினர். (இ)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி-உஷாநந்தினி
சனி, ஞாயிறு 2-30
ராஜபார்ட் ரங்கதுரை

# முன்னாள் அமைச்சர் தில்லோன் தோல்வி

புதுடில்லி, மார்ச் 22 இந்திய லோகசபையின் முன்னாள் சபாநாயகரும் தற் போதைய மத்திய அமைச்சரு மான திரு. ஜி. எஸ். தில் லோன் தோல்வியடைந்துள் ளார். பஞ்சாப் மாநிலத்தில் உள்ள தொகுதி ஒன்றில் இவரை ஜனதா கட்சி வேட் பாளர் 79 ஆயிரம் வாக்கு களால் தோற்கடித்தார்.

### மேலும் சில அமைச்சர்கள் தோல்வி

மத்திய மந்திரிகளான திரு. மாளவியா, திரு. சந்திரஜித் யாதவ், திரு. பிரணப்குமார் முகர்ஜி, ஏ. பி. சர்மா ஆகி யோர் தோற்கடிக்கப்பட்டுள்ள னர். (இ)

# இந்திராவின் மாநிலத்தில் காங்கிரஸுக்கு இடமில்லை

புதுடில்லி, மார்ச் 22 திருமதி இந்திராகாந்தியின் ரேபரேலி தொகுதியை உள் ளடக்கிய உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள 85 தொகுதி களில் இந்திராகாங்கிரசுக்கு ஒரு தொகுதி கூடக் கிடைக்க வில்லை.

ஜனதா கட்சி 27 தொகுதி களிலும் ஜனநாயக காங்கிரஸ் கட்சி 13 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

திருமதி காந்தியின் புதல்வ ரான திரு. சஞ்சய்காந்தியும் பல மத்திய மந்திரிகளும் இதே மாநிலத்தில் போட்டி யிட்டு தோல்விகண்டுள்ளனர்.

# கருணாநிதி மீதான குற்றச்சாட்டே தி. மு. க. தோல்விக்குக் காரணம்

### உடுவில் தர்மலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பணம், புதன் விடுதலையை இலட்சியமாகக் கொண்டு சுதந்திரப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளவர் அந் தத் தூய்மையான இலட்சிய த்தை அடைவதற்குத் தூய்மை யுடன் செயலாற்ற வேண்டும், அவர்கள் தூய்மையானவர்க ளாக இருந்தாலும்கூட சிறித ளவு சந்தேகத்திற்கு இடமளிக் காதவர்களாக அவர்களிருக்க வேண்டும். கலைஞர் கருணாநிதி மீது குற்றச்சாட்டு இன்னமும் நிருபிக்கப்படாவிட்டாலும் கூட, சந்தேகமே தமிழ் நாட்டில் திராவிட முன்னேற் றக்கழகம் இம்முறை தேர்த லில் படுதோல்வி அடைவத ற்குக் காரணமென்று உடுவில் பிரதிநிதியும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு. வி. தர்மலிங்கம் இந்திய தேர்தல் முடிவுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

இந்திராவின் ஆட்சி அகற் றப்பட்டது பற்றிக் குறிப் பிட்ட திரு. தர்மலிங்கம் இந் தியாவில் இந்திராவின் ஆட்சி யில் உற்பத்தி அதிகரித்திருக் கலாம், விலைவாசி குறைந்திரு க்கலாம், வேறு முன்னேற்றங் கள் ஏற்பட்டிருக்கலாம். இவற் றையெல்லாம்விட அடக்கு முறையை மக்கள் விரும்ப வில்லை. மனித உரிமையையும் சுதந்திரத்தையுமே மக்கள் விரும்புகிறார்கள். இதுதான் தேர்தல் முடிவு.

சங்கரத்தை

# கத்திக்குத்துச் சம்பவம்: சந்தேகநபர் சரண்

யாழ்ப்பாணம், புதன் சங்கரத்தைக் கத்திக்குத்துச் சம்பவம் தொடர்பாக சந்தே கத்தின்பேரில் தேடப்பட்டு வந்த கே. சின்னராசா என்ற வாலிபர் நேற்று சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் சர ணடைந்தார்.

சங்கரத்தை துணைவியைச் சேர்ந்த கே. அம்பலவாணர் (52 வயது) என்ற குடும்பஸ் தர் கத்தியால் வயிற்றில் குத் தப்பட்டு குடல் வெளியேறிய நிலையில் யாழ் பெரியாஸ்பத் திரியில் மரணமானார் என்பது தெரிந்ததே. (உ)

## தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன் ''தமிழ்த் தாய் ஈன்ற தவப் புதல்வனும் தமிழர் தம் தன் னிகரற்ற தலைவனும் பாரெட் டும் தமிழன் புகழ்பரப்பிய பண்பாளனும் சட்டத்துறை யில் தன்னிகரற்ற கலைவனும் தமிழர் தம் அரசியல் சமூக பொருளாதாரத்துக்காக அரும்பணியாற்றிய அருந்தவப் புதல்வனும் அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்கியூசி மறைவு எம் எல்லோரையும் ஆறாந்துயரில் ஆழ்த்திவிட்டது அவர் தம் ஆன்மா சாந்தி யடைவதாக.''

அராலிக்கிராம சபை மேற் கண்ட அனுதாபத்தீர்மா னத்தை தனது மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றியது. கூட்டத்தில் அஞ்சலிக்கு மௌனஞ்சலியும் செலுத்தப் பட்டது. (இ)

## கைதடி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் நிரப்பப்படவேண்டும் என்ற தீர்மானம் உட்படப் இன்னும் சில தீர்மானங்கள் இதில் அடங்கியுள்ளது.

தீர்மானப் பிரதிகள் கூட்டு றவு உதவி ஆணையாளர், அர சாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஆ)

## காந்தி சிலைக்கு...

((1 ம்பக்க தொடர்ச்)

பதில் ஜனாதிபதியின் உத்தர வின் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. சகல மாநில அரசுகளும் இதனைக் கடைப் பிடிக்குமாறு உத்தியோக பூர் வமாக அறிவிக்கப்பட்டது.

## வெள்ளி பதவியேற்கும்

பிரதமமந்திரி தெரிவு நாளை வியாழக்கிழமை நடைபெறும் என்றும், நாளை மறுதினம் (வெள்ளி) புதிய அரசு பொறு ப்பேற்கும் என்றும் எதிபார்க் கப்படுகிறது.

ஜனதாவும், ஜனநாயகக்காங் கிரசும் சேர்ந்து பொதுவான ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக் கவுள்ளன. தேர்ந்தெடுக்கப் படும் தலைவர் நாட்டின் புதிய பிரதமராகப் பதவியேற்பார். (ஆ)

## இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 7ந்திருவிழா வான இன்று பகல்9மணிக்கு பகல்திருவிழாவும் மாலை6மணி முதல்7.30மணிவரை ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளால் திருவிளையாடல் புராணவி வுரைத்தொடரும், இரவு 7.30 மணிக்கு வசந்தமண்டப பூசை யும் சுவாமி வெளிவீதிவலம் வருதலும் நிகழும்.

ஈழநாடு
The EELANADU

## காண்டீபனுக்கு மன்னிப்பு அளிக்குமாறு கேட்கவில்லை

### இராசதுரை பேச்சுக்கு 'அமிர்' விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

''காண்டீபன் இங்கிலாந்தில் இருந்து நாடுகடத்தப்படும்நிலை ஏற்பட்டபோது அவரை நாடு கடத்தாது அவருக்கு அரசியல் பாதுகாப்பு அளிக்குமாறு கோரப்பட்டதேதவிர அவருக்கு மன்னிப்பு அளிக்குமாறுகோரப் படவில்லை' என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது: 22-3-77 'ஈழநாடு' பத்திரிகையில் மட்டக்களப்பு வரவேற்பில் திரு. இராசதுரை காண்டீபன் அமிர்தலிங்கம்பற்றிப் பேசியதாக வந்திருக்கும் செய்தி தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதால் இவ்வறிக்கையை வெளியிட விரும்புகிறேன்.

காண்டீபன் இங்கிலாந்தில் இருந்து நாடு கடத்தப்படும் நிலை ஏற்பட்டபோது அவரை நாடுகடத்தாது அவருக்கு அரசியல் பாதுகாப்பு அளிக்குமாறு இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருடன், அங்குள்ள தமிழர் அமைப்புக்களும் இன்னும் பல ஸ்தாபனங்களும் கோரிக்கை விடுத்தன.

அதற்கு உதவியாக இங்குள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரித்தானிய உள்நாட்டு அமைச்சுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தனர்.

அதுதவிர மன்னிப்புக் கொடுக்குமாறு யாரும் கோரவில்லை.

செய்தி பிரசுரிக்கப்பட்ட விதத்தில் காண்டீபனை மன்னிக்கும்படி யாரிடமோ மகஜர் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கருத்துத் தொனிக்கிறது. அதை நீக்கும்வகையில் இத் திருத்தத்தைப் பிரசுரிக்கவும்'.

## ''இவ்வித்தியாலயத்தில் எச்.என்.ஸி.ஈ. ஆரம்பிக்கவும்''

சங்கானை, செவ்வாய்

''சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் எச்.என்.சி.ஈ. வகுப்பு இதுவரை காலமும் ஆரம்பிக்கப்படாமையால் இப்பகுதியில் வாழும் பிள்ளைகள் குறிப்பாக தாழ்த்தப்பட்டமக்கள் அதிகமாக உள்ள இடமான சங்கானையிலிருந்து பலமைகள் தூரத்திற் கப்பால் உள்ள ஏனைய கிராமங்களை நாடி பல தரப்பட்ட இன்னல்களுக்கிடையே மாணவர்கள் செல்லவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது எனவே இத்துயரைநீக்க சங்கானை சிவப்பிரகாசமகாவித்தியாலயத்தில் உடனடியாக எச்.எஸ்.சி.ஈ. வகுப்பை ஆரம்பித்துத்தரவும்.'' இவ்வாறு அவசரதந்திமூலம் நியமன எம்.பி.திரு.எம்.சி.சுப்பிரமணியம் கல்விமந்திரியை கோரியுள்ளார். (அ)

சிறுபான்மையினர் உரிமை உட்பட

# மக்கள் நலன்பேணும் கட்சிக்கே ஆதரவுகிடைக்கும்

## தேர்தல் கருத்தரங்கில் பேர்ணுட் சொய்ஸா எம். பி.

கொழும்பு, செவ்வாய்

''எமது நாட்டில்உள்ள இயற்கைவளங்கள் போதுமான அளவு அபிவிருத்தி செய்யப்படவில்லை. உற்பத்திகள் போதியளவு நடைபெறவில்லை இதேநேரம் அபிவிருத்தியடைந்தநாடுகளால் நம்நாடு சுரண்டப்படுகிறது.'' என்று சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கொழும்பு தெற்கு எம்.பி.திரு. பெர்ணுட் சொய்சா கூறினுர்.

கொழும்பு சமூக சமயநிலையம் ஒழுங்கு செய்த 1977-ம் ஆண்டு பொதுத்தேர்தல் தொடர்பான முதலாவது கருத்தரங்கில் 'எம்முன்னுள்ள பிரச்னைகள்' என்பதுபற்றி பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

### வேறுபாடு நிலவ காரணம்

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது; 'ஜனத்தொகை அதிகரிப்பும் அபிவிருத்தி வளர்ச்சியைப் பாதிக்கிறது. 1947-1977 ஆண்டுகளுக்கு இடையில் நாட்டின் ஜனத்தொகை இரண்டு மடங்காகியுள்ளது. இலங்கையில் வருமானப் பங்கீட்டு முறையில் பெருமளவு வேறுபாடு நிலவுகிறது.

சிறுபாலரான பணம் படைத்த சிலருக்கும் பெரும்பாலரான கிராமப்புற தொழிலாள- விவசாய மக்களுக்கிடையே இவ்வேறுபாடு நிலவக்காரணம் நம்நாட்டில் உள்ள அபிவிருத்திகுன்றிய நிலையேயாகும். கடந்த பொதுத் தேர்தல்களில்ஐக்கிய தேசியக்கட்சியும் சுதந்திரக் கட்சியும் மாறி மாறி இந்த நாட்டில் வெற்றி பெற்று ஆட்சி நடத்தி வந்துள்ளன.

டி.எஸ்.சேனநாயகா தேசபிதா என்று ஐக்கிய தேசியக் கட்சியும், எஸ். டபிள்யூ.ஆர். டி பண்டாரநாயகா தேசபிதா எனறு சுதந்திரக்கட்சியும் பிரசாரம் செய்து மக்களின் வாக்குகளைப் பெற்றன. நெற்செய்கைக்கு உதவிப்பணம், இலவசக்கல்வி இலவச மருத்துவச்சேவை முதலான பல நன்மைகளை மக்களுக்கு அரசாங்கங்கள் வழங்கிவந்துள்ளனர்.

### சேவைகளை மறுப்பின் மக்கள் எதிர்ப்பர்

இச் சேவைகளை மறுக்கும் எந்த அரசாங்கத்தையும் மக்கள் பதவியில் நீடிக்கவிடமாட்டார்கள்.

உற்பத்தி சமூகவுடமைக்கன்றி பங்கீட்டுச் சமூகவுடமைக்கே கடந்தகாலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

### இன்ஊறய பிரச்னைகள்

இன்று மக்களை எதிர்நோக்கும் முக்கிய பிரச்னைகள் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, பொருள்பற்றுக்குறை வேலையில்லாத்திண்டாட்டம், சிறுபான்மையினருக்கு உரிமையின்மை, ஊழல்கள் என்பனவாகும். இவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கும் கட்சிக்கே மக்கள் ஆதரவு உண்டு''

அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி உடன் விடுதலை செய்யவேண்டுமென்ற கருத்துக்கு திரு பெர்ணுட் சொய்சா இக் கருத்தரங்கில் வைத்து ஆதரவுதெரிவித்தார். (உ)

## ஜி. ஜி.

(1-ம் பக்கக் தொடர்ச்சி)

மரணத்துக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றியது.

திரு. கருணாநிதி தலைமையில் இன்று கூடிய தி.மு.க. செயற்குழு, ஜனதா, மார்க்ஸ்ஸிய கம்யூனிஸ்ட், தி.மு.க. கூட்டணி தொடர்ந்து செயற்படவேண்டும் என்று முடிவு செய்தது.

தொழிலாளரின் ஊழியத்திலிருந்து சேமலாப நிதிக்கு கட்டாயமாக பணம்அறவிடும்திட்டத்தை புதிய அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும், அத்துடன் இதுவரை ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகை திரும்ப வழங்கப்படவேண்டும் என்று புதிய அரசை வற்புறுத்தும் தீர்மானமும் நிறைவேறியது.

மத்தியில் புதிய அரசை நிறுவவிருக்கும் ஜனதாவுக்கு தி.மு.க. தொடர்ந்து ஆதரவு வழங்குவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இலங்கை அமரர் ஜி' ஜி. பொன்னம்பலம், அமரர் மு. திருச்செல்வம், ஈ.வி.கே. சம்பத் ஆகியோரின் மறைவுக்கு ஈற்றில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. (ஆ)

## தேர்தலில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லம் தற்போது அதிகமாகக் காணப்படுவதால் ஜூன் மாதமளவில் தேர்தல் நடக்கும்.

### மறுப்பு

பஞ்சாப் முதல்மந்திரி காங்கிரசிலிருந்து விலகி ஜனதாவுடன் சேரப்போவதாக வெளிவந்த செய்தியை மறுத்துள்ளார். சட்டசபையில் காங்கிரசின் வலுவையும் அவர்உறுதி செய்தார்.

### அடிப்படை உரிமை

உள்நாட்டு நெருக்கடி நிலையின்போது நிறுத்தப்பட்டிருந்த அடிப்படைஉரிமை மீண்டும் கிடைக்கவழி செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான சட்டம் நேற்று முதல் ரத்தானது. (ஆ)

## அரசுடன் -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைப்பருவம் முதல் மக்களுக்கு சேவை செய்வது உயிர்க்கொள்கையாக வளர்ந்து விட்டது. தொடர்ந்தும் தமது நல்வாழ்த்து இந்நாட்டு மக்களுக்கு இருக்குமென்று அறிக்கையில் பிரதமர் இந்திரா மேலும் கூறியுள்ளார். (ஆ)

## பழையபூங்கா கொள்ளை வழக்கு தீர்ப்பு இன்று

### 1-ம், 2-ம் எதிரிகள் குற்றவாளிகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி கொள்ளை வழக்கில், 1ம் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார். இன்று தீர்ப்பு வழங்கப்படும்.

இவ்வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம்.எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம்பழையபூங்கா வீதியில், 27,417 ரூபாவைக் கொள்ளையடித்ததாக சபாரத்தினம், அருள்ராசா, சகாயராசா ஆகியோர்மீது குற்றம் சாட்டி இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

2ம் எதிரிசார்பில் சட்டத்தரணி எஸ்.யோகநாதன் ஆஜராஞர். 1ம் எதிரிசார்பில் எவரும் ஆஜராகவில்லை. 2ம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். 3ம் எதிரிமீதான குற்றச்சாட்டை, அரச சட்டத்தரணி வாபஸ் பெற்றுர். (க-அ)

குறைந்த விலையில்

## விவசாயிகளுக்கு கிருமி நாசினிவழங்க இணக்கம்

சங்கானை, செவ்

நாளாந்தம் கிருமிநாசினிகளின் விலை விஷம்போல் ஏறிவருவதைத் தடுத்து நிறுத்தி விவசாயிகள் குறைந்தவிலையில் இவைகளைப் பெறுவது பற்றிய கருத்தரங்கொன்று திருநெல்வேலி அரசினர் கிருஷிக பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட விவசாய உத்தியோகத்தர் திரு என். சிவமுத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வடபகுதியிலுள்ள விவசாயப் பெருக்கக்குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் விவசாய போதஞசிரியர்கள் ஆகியோருடன் கிருமிநாசினி உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களும் கலந்துகொண்டன.

இந்த ஸ்தாபனங்கள் மூலம் பெறும் கிருமிநாசினிகளைக் குறைந்தவிலையில் பெற்று அவ்வப்பகுதி விளைபெருக்கக்குழுக்கள் மூலம் அவ்வப்பகுதிக்கமக்காரருக்கு குறைந்தவிலையில் வழங்குவதெனத்தீர்மானிக்கப்பட்டது.

இதனுல் போலிகிருமிநாசினிகளின் நடமாட்டம் முற்றுப்பெற்று விவசாயிகள் பயனடைவர் என்று விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சிவமுத்துலிங்கம் தெரிவித்துள்ளார். (உ)

## கேரள முதலமைச்சர் ராஜிஞமா!

திருவனந்தபுரம், மார்ச் 22

கேரள மாநில முதன்மந்திரி திரு. அச்சுதமேனன் இன்று தமது மந்திரிசபையின் ராஜிஞமாக் கடிதத்தை கேரள மாநில கவர்னரிடம் சமர்ப்பித்தார்.

ராஜிஞமாவை ஏற்றுக் கொண்ட கவர்னர் புதிய சட்டசபை அமைச்சரவை பதவி ஏற்கும்வரை பதவியிலிருக்குமாறு திரு. அச்சுதமேனனைக் கேட்டுக்கொண்டார். (இ)

## கைதடி ப. நோ. கூ. ச. வேலை நிறுத்தப் பயமுறுத்தல்

கைதடி செவ்.

இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளன கைதடிக்கிளை சில கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் பயமுறுத்தல் கடிதமொன்றை கைதடி ப.நோ.கூ. சங்கத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளது.

சங்க முகாமையாளர், கடன்பகுதி முகாமையாளர் ஆகியோரின் நியமனத்தை சங்க நிரந்தர ஊழியர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி விக்ரோறியா அருளம்மா

காலஞ்சென்ற எஸ். பி. சின்னத்தம்பி அவர்களின் அருமை மனைவியும் செபமணி, சோபி (வேம்படி மகளிர் கல்லூரி) விக்ர (விக்ரோறியாக் கல்லூரி), றெஜி, அமிர்தா (தபாற்கந்தோர்), வண. கருணைராஜ் (அட்டன்) கருணைவதி ஆகியோரின் அன்புத்தாயாரும், போல்தோமஸ் (பலாங்கொட) இந்திராணி, வினிபிரட், சற்குணவதி ஆகியோரின் மாமியாருமான திருமதி சின்னத்தம்பி விக்ரோறியா அருளம்மா காலமானுர். அன்னரது பூதவுடல் யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத்தெரு 23-ம் இல்லத்திலிருந்து நாளை 24-ந் திகதி காலை 8 மணியளவில் பண்ணை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

5768

## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் சண்முகநாதன் (கற்கண்டையா)

இவா காலஞ்சென்ற கந்தப்பிள்ளை சபாரத்தினத்தின் மகனும், K. C. தங்கராசா, அமரர் K. C. சண்முகரத்தினம் ஆகியோரின் சிறிய தந்தையின் மகனும் ஆவர்.

இவரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 9 மணி வரையில், 407, கே. கே. எஸ். வீதி இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தனிப்பட்ட அறிவித்தல் இல்லை.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, (Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.